ஆண்டறிக்கை - 2024

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்
பொல்கொல்ல

உள்ளடக்கம்

	பக்க இலக்கம்
தவிசாளரின் செய்தி	03-04
பணிப்பாளர் நாயகத்தின் செய்தி	05
1. அறிமுகம்	07-08
1.1. நிறுவனத்தின் பின்னணி	
1.2. நிறுவனத்தின் செயற்பணி	08
1.3 நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள்	09-10
1.3.1 நோக்கு	
1.3.2 செயற்பணி	
1.3.3 குறிக்கோள்கள்	
1.3.4 நோக்கங்கள்	
1.4 நிறுவனத்தின் பிரிவுகள் மற்றும் பிரிவுசார் அடிப்படையிலான செயற்பணி	10-11
1.4.1 தாபனப் பிரிவு	
1.4.2 கற்கைப் பிரிவு	
1.4.3 கணக்குகள் பிரிவு	
1.4.4 விடுதிப் பிரிவு	
1.4.5 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு	
1.5 பதவியணி மற்றும் நிறுவன ஒழுங்கமைப்பு	11-12
1.5.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	
1.5.2 நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு	13
1.5.3 நிறுவனத்தில் காணப்படுகின்ற பதவி வெற்றிடங்கள்	14
1.6 நிறுவனத்திற்கு உரித்தான வளங்கள்	15
1.6.1 மனித வளம்	
1.6.1.1 கல்விசார் பதவியணி	
1.6.1.2 கல்விசாரா பதவியணி	17
1.6.1.3 கனிஷ்ட பதவியணி	18-19
1.6.2 நிறுவனம்சார் பௌதீக வளங்கள்	
1.6.2.1 மகிந்த ராஜபக்ஷ கேட்போர்கூடம்	
1.6.2.2 பிரதான மண்டபம்	19-21
1.6.2.3 விரிவுரை மண்டபம்	
1.6.2.4 கணினி ஆய்வுகூடம்	
1.6.2.5 நூலகம்	
1.6.2.6 விடுதி	22
1.6.2.7 உணவகம்	
1.6.2.8 சுற்றுலா விடுதி	23-24
1.6.2.9 அச்சகம் மற்றும் செவிப்புல, கற்புல வசதிகள்	
1.6.2.10 உத்தியோகபூர்வ இல்லங்கள்	24
1.6.2.11 வாகனம் நிறுத்தி வைக்கும் வசதிகள்	
1.7 நிறுவனம்சார் பாடநெறிகள்	25
1.7.1 2022 – 2024 காலப்பகுதியில் பாடநெறிகளை நடாத்துவதன் முன்னேற்றம்	
1.7.2 டிப்ளோமா பாடநெறி	
1.7.2.1 வியாபார முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி	25-26

1.7.2.2 கணக்காய்வு டிப்ளோமா பாடநெறி	26
1.7.2.3 வங்கி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி	
1.7.2.4 மனித வள முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி	
1.7.2.5 கணக்கீட்டு டிப்ளோமா பாடநெறி	
1.7.3 சான்றிதழ் பாடநெறி	27
1.7.4 குறுங்கால பாடநெறி	27-33
1.8 நிறுவனத்தின் எதிர்பார்ப்புக்கள்	33-34
2. நிறுவனம்சார் நிருவாகம் மற்றும் நிருவாக நடவடிக்கைகளின் முன்னேற்றம்	35-36
2.1 முகாமைத்துவச் சபை மற்றும் அந்நடவடிக்கைகளின் முன்னேற்றம்	
2.1.1 முகாமைத்துவ சபையின் ஒழுங்கமைப்பு	
2.1.2 2024 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவ சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் பற்றிய விபரம்	37
2.1.3 2024 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவ சபையின் நடவடிக்கைகளின் முன்னேற்றம்	37
2.2 2024 ஆம் ஆண்டுக்கு கற்கைச் சபை மற்றும் அந்நடவடிக்கைகளின் முன்னேற்றம்	38
2.2.1 கற்கைச் சபையின் ஒருங்கமைப்பு	
2.2.2 2024 ஆம் ஆண்டுக்கான கற்கைச் சபையின் பிரதிநிதித்துவம்	39
2.2.3 2024 ஆம் ஆண்டுக்கான கற்கைச் சபையின் நடவடிக்கைகளின் முன்னேற்றம்	
2.3 கணக்காய்வு முகாமைத்துவக் குழு மற்றும் அந்நடவடிக்கைகளின் முன்னேற்றம்	39
2.3.1 கணக்காய்வு முகாமைத்துவ குழுவின் ஒழுங்கமைப்பு	
2.3.2 2024 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு முகாமைத்துவ குழுவின் பிரதிநிதித்துவம்	40
2.3.3 2024 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு முகாமைத்துவ குழுவின் நடவடிக்கைகளின் முன்னேற்றம்	41
2.3.4 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் முன்னேற்றம்	42
3 2024 ஆம் ஆண்டுக்குரிய நிறுவகத்தின் முன்னேற்றம்	43
3.1 தாபன மற்றும் நிருவாகப் பிரிவின் முன்னேற்றம்	
3.1.1 மனிதவள அபிவிருத்தி	
3.1.2 *பௌதீக அபிவிருத்தி மற்றும் கொள்முதல் நடவடிக்கைகள்*	
3.1.3 பரீட்சைகளை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல்	44
3.1.3.1 2024 ஆம் ஆண்டுக்கான பரீட்சைகளின் பெறுபேறுகளை வெளியிடுவதன் முன்னேற்றம்	
3.1.3.2 மீட்டல் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடல்	
3.1.3.3 2022 - 2024 இல் பரீட்சை நடாத்தியதன் முன்னேற்றம்	45
3.2 கற்கைப் பிரிவின் முன்னேற்றம்	
3.2.1 பாடநெறிகளை நடாத்துவதன் முன்னேற்றம்	45-46
3.2.1.1 பாடநெறிகளின் முன்னேற்றம் (03 மாதங்களுக்கு மேற்பட்டவை)	
3.2.1.2 குறுங்கால பாடநெறிகளை நடாத்துவதன் முன்னேற்றம்	47-48
3.2.1.3 வெளியாரின் கோரிக்கைகளின் பேரில் நடாத்தப்பட்ட பாடநெறிகளை நடாத்தியத்தின் முன்னேற்றம்	48-49
3.2.2 கூட்டுறவுத்துறையின் ஆராய்ச்சி நடவடிக்கைகளின் முன்னேற்றம்	50-54
3.2.3 நூலக வசதிகளின் முன்னேற்றம்	54-55
3.3 விடுதிப் பிரிவின் முன்னேற்றம்	55-56
3.3.1 2024 ஆம் ஆண்டில் விடுதிப் பிரிவு மற்றும் கேட்போர்கூடத்தை ஒதுக்கும் நடவடிக்கைகளின் முன்னேற்றம்	
3.3.2 2022 – 2024 ஆம் ஆண்டுகளில் விடுதிப் பிரிவின் முன்னேற்றம்	56
3.4 நிதிப் பிரிவின் முன்னேற்றம்	56-58
4 2024.12.31 ஆம் திகதிக்கு நிறுவகத்தின் இறுதிக் கணக்குகள்	**59-88**
5 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	**89-100**

தவிசாளரின் செய்தி



2024 இன் ஆண்டறிக்கைக்கு அதன் தவிசாளர் என்ற வகையில் பெரும் மகிழ்ச்சியுடன் இந்த செய்தியைப் பதிவிடுகின்றேன். 2024 ஆண்டு முன்னைய ஆண்டுகளை மீட்டிப்பார்த்து, புதிய யுகத்தை நோக்கிப் பயணித்த ஆண்டாகும். முன்னார் காணப்பட்ட அரச – தனியார் பங்குடைமைகளைக் கொண்ட பல்வேறு வியாபாரங்களை அறிமுகம் செய்தமை மற்றும் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் பணிகளை கொழும்புக்கு மாற்றம் செய்வதன் மூலம் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்திற்கு மறுசீரமைப்புப் பணிகளை அமுல்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது.

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் என்பது பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கும் கூட்டுறவுத் துறைக்கான ஆலோசனை மற்றும் ஆராய்ச்சி சேவைகளை வழங்குவதற்காக தேசிய மட்டத்தில் உள்ள ஒரே அரச நிறுவனமாகும். மாகாண மட்டத்தில் அவ்வாறான முயற்சிகள் செயற்படாத நிலையில் சகல மாகாண மட்டங்கள் மற்றும் மத்திய மட்டத்தில் மத்திய கூட்டுறவு அமைப்புக்கள் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்துக்கு சேவையாற்றும் போது தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்திற்கு பரந்தளவிலான செயற்பணி பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

ஆண்டினுள் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் செயற்பாடுகள், ஒரு சில எதிர்பாராத நிகழ்வுகள் மற்றும் கொவிட் தொற்றின் விளைவுகளுக்கு மத்தியிலாயினும், குறித்த பணிகள் திருப்திகரமான மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. நிறுவனத்தின் கட்டமைப்புசார் மாற்றத்துக்கான நடவடிக்கைகளும் அக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்ததனால் நிறுவனத்தின் செயற்பணியை நிறைவேற்றும் போது முகாமைத்துவத்துக்கு பெரும் அழுத்தங்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. எவ்வாறாயினும் பயிற்சிச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக பாரியளவில் இடம்பெற்றதுடன், நிறுவகத்தின் மண்டப வசதிகள் போன்றவற்றை வாடகைக்கு வழங்குவதன் மூலம் கிடைக்கின்ற வருமானம் இதன் போது நிருவாக நடவடிக்கைகளுக்கு உதவியாக அமைந்தது.

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்திற்கு, ரூ.மி. 59.78 ஆன சுய உருவாக்க வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்ததுடன், இதில் கல்வி மற்றும் பயிற்சி ஆகிய பிரதான பணிகளின் பங்களிப்பு மூலம் உழைக்கப்பட்ட வருமானம் ரூ.மி. 17.68 ஆகும். இது மொத்த வருமானத்தில் 29.57% ஆகும். ஆண்டினுள் டிப்ளோமா பாடநெறிகள் 6 உம், குறுங்கால பாடநெறிகள் 45உம் நடாத்தப்பட்டன. ஆண்டுக்கான ரூ.மி. 90.13 ஆன மொத்த செலவினத்தைக் கவனத்தில் கொள்ளும் போது குறுங்கால பாடநெறிகள் 100 ஐ நடாத்தி வேண்டியிருந்த போதிலும் ஒரு சில உத்தேச பாடநறிகளுக்கு போதியளவில் பயிலுனர்கள் இருக்காமை காரணமாக நடாத்த முடியவில்லை. பாடநெறிகளுக்கு குறைந்தபட்ச பயிலுனர்களின் எண்ணிக்கை 40 பேர் ஆவார்கள். ஏனைய பாடநெறிகளில் தகவல் தொழில்நுட்பம் போன்ற விடயப்பரப்புக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கேட்போர் கூடம் இந்த ஆண்டினுள் ரூ.மி. 12.09 ஆன வருமாநத்தை உழைத்துக் கொண்டுள்ளதுடன், கடந்த 10 வருட காலப்பகுதியில் உழைத்துக் கொண்ட உச்சளவான வருமானமாக இது உள்ளது. விடுதிப் பிரிவு ரூ.மி. 14.07 ஆன வருமானத்தை உழைத்துக் கொண்டுள்ள போதிலும், இதன் மிகை ரூ.மி. 0.43 ஆகும். தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் எதிர்கொண்ட அசௌகரியங்களுக்கு மத்தியில் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் வருமானம் அதிகரித்துள்ளது. இது கொவிட் தொற்றின் பின்னர் மக்கள் நடமாட்டத்தின் விளைவாக இருக்கலாம்.

எவ்வாறாயினும், தனியார் துறையினருடன் பங்குடைமை அடிப்படையில் வர்த்தக தொழில்முயற்சியொன்றாக மாற்றியமைப்பதற்காக மறுசீரமைப்புக்கான அரச தொழில் முயற்சிகள் பட்டியலில் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் உள்ளடக்கப்பட்டுள்ளது. தேசிய அபிவிருத்தியின் பங்காளர் என்ற வகையில் கூட்டுறவுச் சங்கங்களைப் பயன்படுத்திக் கொள்ள புதிய அரசு தமது தீவிர விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளது.

எனவே, பொல்கொல்ல வளவில் கூட்டுறவு அபிவிருத்தியின் தமது செயற்பணிகளை பேணிவருவதற்காக தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் தற்போதைய நிலைமை மாற்றமடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்காலத்தில் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் செயற்பணிகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான முன் ஆயத்தமாக 2024 டிசம்பர் மாதம் புதிய முகாமைத்துவ சபை நியமனம் செய்யப்பட்டது.

புதிய அரசினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கூட்டுறவுத்துறைக்கான அபிவிருத்திக் கொள்கைகளுக்கு இசைவாக புதிய நோக்குடன் உபாயமுறையிலான திட்டமொன்று தயார் செய்யப்படவுள்ளது.



டபிள்யு.யு. ஹேரத்
தவிசாளர்
தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்.

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



கூட்டுறவு அபிவிருத்திச் செயற்பணியின் பங்காளர் என்ற வகையில் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் தமது சமாந்தரமான நிறுவனங்களுடன் சகோதரத்துவத்தைப் பேணி சுமார் இரண்டரை தசாப்த காலமாக கூட்டுறவுத்துறையின் மனித வளத்தை அறிவு மற்றும் திறமைகளைக் கொண்டதாக மாற்றியமைக்கும் அளப்பரிய செயற்பணிக்கு தோள்கொடுத்துள்ளது.

பூகோள, சமூக, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு மத்தியில் கூட்டுறவு இயக்கம் போட்டித்தன்மைமிக்க அணுகுமுறையை நோக்கி பிரவேசித்திருப்பதனால் மேற்படி முறையியலுக்கு இணங்கிச் செயற்படுவதற்கு கூட்டுறவுத்துறையினருக்கு அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை புதுப்பித்தல் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேசிய மட்டத்திலுள்ள ஒரே அரச நிறுவனம் என்ற வகையில் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் தற்போது சவால்மிக்க அணுகுமுறையை நோக்கி பிரவேசித்துள்ளது.

காலத்தின் தேவைகளுக்கு இணங்க மாற்று உபாயமுறைகளை நோக்கிப் பயணித்து பௌதீக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பார்க்க ஒன்லையின் முறைகளின் ஊடாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த வேண்டியதன் அவசியத்தன்மையை இனங்கண்டு அதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விடய ரீதியான அறிவு வளர்க்கப்பட்ட பதவியணியினர் ஊடாக நிறுவகத்தின் நடவடிக்கைகளை பேணிவந்துள்ளது.

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் விஸ்தரிக்கக்கூடியதான கூட்டுறவுக் கல்விச் சந்தை காணப்படுவதன் காரணமாக நிறுவகத்தின் பிரதான வருமான உருவாக்கத் துறையான கற்கைத் துறையை மென்மேலும் விஸ்தரித்து தமிழ் மொழி மூலமான பாடநெறிகளை நடாத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச கல்வி நிறுவகங்களுடனான தொடர்புகளை வளர்த்துக் கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த காலப்பகுதியில் நிலவிய பொருளாதார ரீதியான சிக்கலான நிலைமை படிப்படியாக சீரடையும் போது, நூலக சேவைகளை வழங்குதல், கூட்டுறவு மற்றும் கூட்டுறவு அல்லாத பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறிகளை நடாத்தல், விடுதி வசதிகளை செய்துகொடுத்தல், மண்டப வசதிகளை பெற்றுக் கொடுத்தல் போன்ற பல்வேறு சேவைகளை வழங்குதல், படிப்படியாக வழமை நிலையை அடைந்துவருவது திருப்திகரமான மட்டத்தில் காணப்படுகின்றது என்று குறிப்பிட முடியும்.

இதற்காக பல்வேறு அரச மறுசீரமைப்புக்களுக்கு மத்தியிலாயினும் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு, சகல கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களங்கள், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு போன்ற அரச நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவுத்துறையினரிடம் கிடைக்கின்ற ஒத்துழைப்பு நிறுவகத்தின் செயற்பணிகளை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு பெரும் உறுதுணையாக அமைந்துள்ளது.

கூட்டுறவுத்துறையின் அபிவிருத்திக்காக தேசிய மட்டத்திலுள்ள ஒரே நிறுவகம் என்ற வகையில் பூகோள, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப சவால்களை வெற்றிகொண்டு கூட்டுறவுத் துறையின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவது எமது ஒரே நோக்கமாகும்.

வீ.பீ.கே. பிலபிட்டிய,
பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர் (பதில்)
தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்.

1. அறிமுகம்

1. அறிமுகம்

1.1 நிறுவகத்தின் பின்னணி

இலங்கையின் கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பிலான பிரதான செயற்பணியை நிறைவேற்றுகின்ற தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் 1943 முதல் 2001 வரை கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் இலங்கை கூட்டுறவுக் கல்லூரியாக இயங்கி வந்ததுடன், கூட்டுறவுக் கல்லூரியின் செயற்பணியை மென்மேலும் விஸ்தரிக்கும் நோக்கத்துடன் 2001 இன் 01 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் மூலம் கூட்டுறவு அபிவிருத்தி சம்பந்தமான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக மென்மேலும் சுயாதீனமான நிறுவனமொன்றாக தாபிப்பதன் அடிப்படையில் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகமாக மீளத்தாபிக்கப்பட்டது.

கண்டி மாவட்டத்தின் பாததும்பர பிரதேச செயலாளர் பிரிவில் பொல்கொல்ல கிராம அலுவலர் பிரிவில் மஹாவலி கங்கையை திசைதிருப்பும் அணைக்கட்டுக்கு அருகே சுமார் 22 ஏக்கர் அளவான மனங்கவர் நிலப்பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த நிறுவகத்தின் சுற்றுப்புறச் சூழல் கற்கை நடவடிக்கைகளுக்கு மிகவும் பொருத்தமானதாக அமைந்துள்ளது.

கூட்டுறவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள மனித வளங்களை, அப்பணிகளில் வினைத்திறனுடனும், விளைதிறன்மிக்கவாறும் ஈடுபடுத்துவதற்குத் தேவையான அறிவு மற்றும் திறமைகளைக் கொண்டவர்களாக மாற்றியமைப்பது தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் முக்கிய நோக்கமாகும் என்பதுடன் அதற்கான அறிவை வளர்த்துக் கொள்ளும் மற்றும் இற்றைப்படுத்தும் பாடநெறிகளை நடாத்தல், செயலமர்வுகளை நடாத்தல், ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல், ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், கூட்டுறவுத் தரவு முறைமையை இற்றைப்படுத்திப் பேணிவருதல் மற்றும் தகவல் தொடர்பாடல் வசதிகளைச் செய்துகொடுத்தல், கூட்டுறவு நிறுவனங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை வளர்த்தல் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இப்பணிகளை விளைதிறனுடன் நிறைவேற்றுவதற்குப் போதியளவிலான பௌதீக மற்றும் மனித வளங்கள் நிறுவனத்திடம் காணப்படுவதுடன் நவீன வசதிகளைக் கொண்ட 1120 ஆசனங்கள் உள்ள மகிந்த ராஜபக்ஷ கேட்போர்கூடம், பிரதான மண்டபம் உள்ளிட்ட விரிவுரை மண்டபங்கள், மாணவர் விடுதி மற்றும் விடுதி வசதிகள், உணவு வழங்கும் உணவு உட்கொள்ளும் அறை வசதிகள், கணினி ஆய்வுகூடம், கற்புல, செவிப்புல மற்றும் அச்சிடும் வசதிகள், சகல வசதிகளையும் கொண்ட நூலகம், வாகனத் தரிப்பிட வசதிகள் மற்றும் 71 பேரைக் கொண்ட பதவியணியினரும் இதில் உள்ளடங்குகின்றார்கள்.

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகமானது, வர்த்தக, வாணிப உணவுப் பாதுகாப்பு, மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிவருவதுடன், நிறுவனத்தின் நிருவாகப் பணிகள் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் 07 பேரைக் கொண்ட நிறுவன முகாமைத்துவச் சபையினால் மேற்கொள்ளப்படுவதுடன், கற்கை நடவடிக்கைகள் முகாமைத்துவ சபையினால் நியமனம் செய்யப்படுகின்ற நிறுவகத்தின் கற்கைச் சபையின் கண்காணிப்பின் கீழ்

மேற்கொள்ளப்படுகின்றன. பணிப்பாளர் நாயகம் நிறுவகத்தின் பிரதம நிறைவேற்று அலுவலராவார்.

கூட்டுறவுத் தொழிலின் தற்கால சவால்களை வெற்றிகொள்வதற்கு வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயற்பணிக்குப் பலம்சேர்க்கும் வகையில் கூட்டுறவு அபிருத்தித் திணைக்களம், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு மற்றும் தேசிய கூட்டுறவுச் சபையுடன் ஒத்துழைப்பைப் பேணி நடவடிக்கைகளை மேற்கொண்டு தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் இரண்டு தசாப்தத்திற்கும் மேற்பட்ட காலமாக தமது செயற்பணியை நிறைவேற்றி வருகின்றது.

1.2 நிறுவகத்தின் செயற்பணி

2001 இன் 01 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தை தாபிக்கும் சட்டத்துக்கு அமைய நிறுவனத்தின் செயற்பணி பின்வருமாறாகும்.

i. கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளை மேம்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்வதற்கான நிலையமாக செயற்படுதல்.

ii. நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்திக் கொண்டு கூட்டுறவு அபிவிருத்தி பற்றிய பயிற்சிகளை வழங்குதல்.

iii. கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேம்படுத்தல்.

iv. கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஆட்களுக்கு இடையிலான பரஸ்பர செயற்பாடுகள் மற்றும் தகவல் பரிமாற்றத்துக்கான வசதிகளை செய்துகொடுத்தல்.

v. கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பிலான தரவுகளை சேகரிப்பதற்கான வள நிலையமொன்றாக செயற்படுதல் மற்றும் சேகரிக்கப்பட்ட குறித்த தரவுகளை பிரகடனம் செய்வதன் மூலம் ஒன்றுதிரட்டல் மற்றும் பரப்புதல்.

vi. கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பிலான விடயங்கள் சம்பந்தமான கலைசார் மற்றும் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்தல் மற்றும் அவ்வாறான பாடநெறிகளை கற்று உரிய பரீட்சைகளில் சித்தியடையும் ஆட்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் வேறு கலைசார் தேர்ச்சிகளை கையளித்தல்.

vii. முகாமைத்துவ திறமைகள் தேவைப்படுகின்ற கூட்டுறவு தொழில்முயற்சிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டு முகாமைத்துவம் செய்தல்.

viii. கூட்டுறவு தொழில்முயற்சிகளுக்கு தொழில்சார் ஆலோசனைகளை வழங்குதல்.

ix. மாதிரி கூட்டுறவுக் கிராமங்கள், மாதிரிக் கூட்டுறவு வர்த்தக நிலையங்கள் மற்றும் பிரதேச நிலையங்களை தாபித்தல்;
மற்றும்

x. நிறுவகத்தின் பணிகளுக்கு சமமான பணிகளை நிறைவேற்றுகின்ற இலங்கையிலுள்ள அல்லது வெளிநாடுகளில் காணப்படுகின்ற அமைப்புக்களுடன் ஒத்துழைப்பைப் பேணி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

1.3 நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள்

1.3.1 நோக்கு

நிலைபேறாக அபிவிருத்தியடைந்த இலங்கை.

1.3.2 செயற்பணி

நியம கற்கைப் பாடநெறிகள், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் அறிவை பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

1.3.3 குறிக்கோள்கள்

1. பாடநெறிகளை நடாத்தல்:
   - அ. உத்தேச பட்டப் பாடநெறி (ளுடுஞகு மட்டம் - 05)
   - ஆ. தொழில்முயற்சி பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (ளுடுஞகு மட்டம் - 04)
   - இ. டிப்ளோமா பாடநெறி (ளுடுஞகு மட்டம் - 03)
     - i. வியாபார முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா
     - ii. கணக்காய்வு டிப்ளோமா
     - iii. வங்கி முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா
     - iv. மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
     - v. கணக்கீட்டு டிப்ளோமா
     - vi. சந்தைப்படுத்தல் டிப்ளோமா
     - vii. நுண் நிதி முகாமைத்துவ டிப்ளோமா
     - viii. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப டிப்ளோமா (னுஜீ ளை ஐஊவு - ஏஞ டுநஎநட 05)
   - ஈ. சான்றிதழ் பாடநெறி மற்றும் குறுங்கால பாடநெறிகள்
   - உ. கூட்டுறவு அபிவிருத்தி வகுப்பு 1 ஐச் சேர்ந்த அலுவலர்களின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையை பூர்த்தி செய்வதற்கு அரச பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்பை மேற்கொண்டு வருகின்ற மாணவர்களுடன் இணைந்து ஆராய்ச்சி முறையியல் பற்றிய பாடநெறிகளை நடாத்தல்

2. கூட்டுறவு சங்கங்களுக்கு விரிவான தரவு முறைமையை தயார் செய்தல்.

3. கூட்டுறவு சங்கங்களை மேம்படுத்துவதற்காக கூட்டுறவுத் துறையில் பரந்தளவில் அனுபவம் பெற்றுள்ள ஆட்கள் மூலம் ஆலோசனை மற்றும் அனுபவங்களைப் பரிமாற்றிக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

4. தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து கற்றல் மற்றும் பயிற்சி செயலமர்வுகளை நடாத்தல், திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், மாணவர் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

5. சமூக அனுசரண நிகழ்ச்சித்திட்டங்கள், சமூக ஊடகம், இலக்குக் குழுக்களுக்கான இடத்தை மையமாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வெகுசன ஊடகங்கள் மூலம் நிறுவனத்தின் நன்மதிப்பை கட்டியெழுப்புதல்.

1.3.4 நோக்கங்கள்

1. கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளை மேம்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுகின்ற நிலையமொன்றாக நடவடிக்கை மேற்கொள்ளல்.
2. நவீன தொழில்நுட்ப முறையியல்கள் ஊடாக கூட்டுறவு தொடர்பிலான துறைகளில் ஈடுபட்டுள்ள ஆட்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கல்வி மற்றும் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல்.
3. கூட்டுறவு அபிவிருத்தி பற்றிய ஆராய்ச்சிகளை மேம்படுத்தல்.
4. கூட்டுறவின் அறிவுசார் கேந்திர நிலையமாக செயற்படுதல்.
5. கூட்டுறவு தொழில்சார்ந்த முகாமைத்துவ ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
6. நிறுவனத்தின் பணிகளுக்கு சமமான பணிகளை நிறைவேற்றுகின்ற இலங்கையின் அல்லது அதற்கு வேளியேயுள்ள நிறுவனங்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளல்.
7. நிறுவனம் உழைக்கின்ற வருமானத்தை மேம்படுத்திக் கொள்ளல்.

1.4 நிறுவனத்தின் பிரிவுகள் மற்றும் பிரிவுசார் அடிப்படையிலான செயற்பணி

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகமானது கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஐந்து பிரதான பிரிவுகளின் கீழ் இயங்கிவருகின்றது.

1.4.1. தாபனப் பிரிவு

முகாமைத்துவ சபை நடவடிக்கைகள், தாபன நடவடிக்கைகள், பரீட்சை நடவடிக்கைகள், பெறுகை நடவடிக்கைகள், மனித மற்றும் பௌதீக வள அபிவிருத்தி நடவடிக்கைகள், பாதுகாப்பு மற்றும் துப்பரவேற்பாட்டு நடவடிக்கைகள் போன்ற ஒப்பந்தம்சார் சேவை நடவடிக்கைகள், இணையத்தளத்தை பேணிவரும் பணிகள் போன்ற வழமையான நிருவாக நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1.4.2. கற்கைப் பிரிவு

கற்கை மற்றும் பயிற்சிப் பாடநெறிகளை திட்டமிடுவதும், அபிவிருத்தி செய்வதும், மேற்படி பாடநெறிகளை நடாத்தல், பாடநெறி மதிப்பீட்டு நடவடிக்கைகள், கூட்டுறவு ஆராய்ச்சி நடவடிக்கைகள், கூட்டுறவு தொழில்முயற்சிகளுக்கான ஆலோசனை நடவடிக்கைகள், நூலக சேவைகளை வழங்கும் நடவடிக்கைகள், கூட்டுறவுத் தகவல் முறைமையை பேணிவரும் நடவடிக்கைகள் போன்ற பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

1.4.3. கணக்குகள் பிரிவு

வருடாந்த வரவு செலவுத்திட்டத்தைத் தயார் செய்தல், மாதாந்த கணக்குப் பொழிப்பைத் தயார் செய்தல், நிலையான சொத்துக்கள், நாளாந்த கணக்கு நடவடிக்கைகள், வருடாந்த இறுதிக் கணக்குகளைத் தயார் செய்தல், கணக்காய்வு வினாக்களுக்கான விடைகளைத் தயார் செய்தல், சகல வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பிலான கணக்கு நடவடிக்கைகள் இப்பிரிவின் செயற்பணியாக உள்ளன.

1.4.4. விடுதிப் பிரிவு

நிறுவகத்திற்கு உரித்தான மகிந்த ராஜபக்ஷ கேட்போர்கூடம், பிரதான மண்டபம் உட்பட விரிவுரை மண்டபங்களை ஒதுக்குதல், விடுதி அறைகளை ஒதுக்குதல் தொடர்பிலான நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்றவற்றுக்கு உணவு, குடிபானம் உள்ளிட்ட வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் இது சம்பந்தமான வருமானங்களை உழைத்தல் தொடர்பிலான நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

1.4.5 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தைத் தயார் செய்தல், அமுல்படுத்தல் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவக் குழு தொடர்பிலான நடவடிக்கைகள் இப்பிரிவின் செயற்பணியாகும்.

1.5. பதவியணி மற்றும் நிறுவன ஒழுங்கமைப்பு


1.5.1. அங்கீகரிக்கப்பட்ட பதவியணி

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்திற்கு பின்வருமாறு 71 பேரைக் கொண்ட பதவியணி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பதவித் தொகுதி	சம்பளக் குறியீடு	பதவிப் பெயர்	பதவிகளின் எண்ணிக்கை
சிரேஷ்ட முகாமையாளர்	HM 2-1	பணிப்பாளர் நாயகம்	01
சிரேஷ்ட முகாமையாளர்	HM 1-1	பதிவாளர்	01
		பணிப்பாளர் (கற்கை மற்றும் அபிவிருத்தி)	01
சிரேஷ்ட கற்கை மற்றும் ஆராய்ச்சி	AR – 2	சிரேஷ்ட விரிவுரையாளர்	04
		சிரேஷ்ட நூலகர்	01
		சிரேஷ்ட ஆராய்ச்சியாளர்	01
கற்கை மற்றும் ஆராய்ச்சி	AR – 1	விரிவுரையாளர் / உதவி விரிவுரையாளர்	08
		நூலகர்/ உதவி நூலகர்	01
		ஆராய்ச்சியாளர்/ உதவி ஆராய்ச்சியாளர்	01
முகாமைத்துவம்	MM 1-2	உதவிப் பணிப்பாளர் (விடுதி)	01
		உதவிப் பணிப்பாளர் (நிதி)	01
		உதவிப் பதிவாளர்	01
		உள்ளகக் கணக்காய்வாளர்	01
கனிஷ்ட மட்டத்திலான முகாமையாளர்கள்	JM 1-1	கணக்கு அலுவலர்	02
		நிருவாக அலுவலர் (பரீட்சை)	01
		நிருவாக அலுவலர் (நிருவாகம்/ மனிதவளம்)	01
		பெறுகை மற்றும் பராமரிப்பு அலுவலர்	01
		போக்குவரத்து அலுவலர்	01
		நிருவாக அலுவலர் (மாணவர் அலுவல்கள்)	01
		சந்தைப்படுத்தல் மேம்பாட்டு மற்றும் அச்சு அலுவலர்	01
		கற்புல, செவிப்புல நிகழ்ச்சித்திட்ட அலுவலர்	01
		விடுதிப் பொறுப்பு அலுவலர்	01
தத்துவமளிக்கும் / அமுல்படுத்தும் / விஸ்தரித்தல் அலுவலர்கள்	MA 5-3	கணினி நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர்	01
அமுல்படுத்தும் / விஸ்தரித்தல் அலுவலர்கள்	MA 4	கணினி ஆலோசகர்	03
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)	MA 2-1	கற்புல செவிப்புல தொழில்நுட்ப உதவியாளர்	01
		அச்சு இயந்திர தொழில்நுட்ப உதவியாளர்	01
		முறைமை இயக்குநர்	01
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா)	MA 1-1	முகாமைத்துவ உதவியாளர்	10
ஆரம்ப வகுதி –தேர்ச்சி	PL – 3	சாரதி	06
ஆரம்ப வகுதி – பகுதியளவிலான தேர்ச்சி	PL – 2	சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர்	01
ஆரம்ப வகுதி – தேர்ச்சி அல்லாத	PL – 1	அலுவலக சிற்றூழியர்	14
மொத்தம்			**71**

நிறுவனம்சார் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 71 ஆக உள்ள போதிலும், 2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிறுவனத்தில் சேவையாற்றி வருகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை 38 ஆகக் காணப்பட்டது. (உதவி விரிவுரையாளர்கள் இருவர் கடமைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவியின் கடமைகளை நிறைவேற்றி வருகின்றார்கள்.) அன்றைய திகதிக்கான பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 33 ஆகும்.

1.5.2 நிறுவகத்தின் ஒழுங்கமைப்பு



1.5.3 நிறுவகத்தில் நிலவும் பதவி வெற்றிடங்கள்

நிறுவகத்திற்கு 71 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் 2024.12.31 ஆம் திகதிக்கு நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை 33 ஆகும். இது பின்வருமாறு காணப்பட்டது. 2024.12.31 ஆம் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிகள், உண்மையான பதவியணி மற்றும் பதவியணி வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள்.

தொடர் இல.	பதவி	அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை	தற்போதுள்ள எண்ணிக்கை	வெற்றிடம்
1.	பணிப்பாளர் நாயகம்	01	-	01*
2.	பதிவாளர்	01	-	01
3.	பணிப்பாளர் (கற்கை மற்றும் அபிவிருத்தி)	01	-	01
4.	சிரேஷ்ட விரிவுரையாளர்	04	01	03
5.	சிரேஷ்ட நூலகர்/ நூலகர்	01	01	-
6.	சிரேஷ்ட ஆராய்ச்சியாளர்	01	-	01
7.	விரிவுரையாளர்;/ உதவி விரிவுரையாளர்	08	08**	-
8.	நூலகர்/ நூலகர்	01	01	-
9.	ஆராய்ச்சியாளர் /உதவி ஆராய்ச்சியாளர்	01	01	-
10.	உதவிப் பணிப்பாளர் (நிதி)	01	01	-
11.	உதவிப் பணிப்பாளர் (விடுதி)	01	01	-
12.	உதவிப் பதிவாளர்	01	01	-
13.	உள்ளகக் கணக்காய்வாளர்	01	01	-
14.	நிருவாக அலுவலர் (நிருவாகம்/ மனிதவளம்)	01	01	-
15.	நிருவாக அலுவலர் (மாணவர் அலுவல்கள்)	01	01	-
16.	கணக்கு அலுவலர்	02	02	-
17.	நிருவாக அலுவலர் (பரீட்சை)	01	-	01
18.	பெறுகை மற்றும் பராமரிப்பு அலுவலர்	01	01	-
19.	சந்தைப்படுத்தல் மேம்பாட்டு மற்றும் அச்சு அலுவலர்	01	-	01
20.	கற்புல, செவிப்புல நிகழ்ச்சித்திட்ட அலுவலர்	01	-	01
21.	விடுதிப் பொறுப்பு அலுவலர்	01	01	-
22.	கணினி நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர்	01	-	01
23.	கணினி ஆலோசகர்	03	03	-
24.	கற்புல செவிப்புல தொழில்நுட்ப உதவியாளர்	01	-	01
25.	அச்சு இயந்திர தொழில்நுட்ப உதவியாளர்	01	-	01
26.	*தொழில்நுட்ப அலுவலர்*	01	-	01
27.	முறைமை இயக்குநர்	01	-	01
28.	முகாமைத்துவ உதவியாளர்	10	03	07
29.	சாரதி	06	04***	02
30.	சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர்	01	01	-
31.	அலுவலக சிற்றூழியர்	14	05	09
	மொத்தம்	71	38	33

* பணிப்பாளர் நாயகம் பதவிக்கு பதில் கடமையாற்றுவதன் அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

** விரிவுரையாளர் ∴ உதவி விரிவுரையாளர்கள் இருவர் பதில் கடமையாற்றுவதன் அடிப்படையில் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவியின் கடமைகளை நிறைவேற்றி வருகின்றார்கள் என்பதுடன், இவர்களில் உதவி விரிவுரையாளர் ஒருவர் சம்பளத்துடனான வெளிநாட்டுக் கற்கை லீவு பெற்றுக் கொண்டுள்ளார்.

*** சாரதி ஒருவர் சம்பளம் அற்ற வெளிநாட்டு லீவு பெற்றுக் கொண்டுள்ளார்.

1.6. நிறுவகத்திற்கு உரித்தான வளங்கள்

1.6.1. மனித வளம்

நிறுவகத்தின் பதவியணியானது கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணி என்ற வகையில் இரண்டு வகுதிகளுக்கு உரித்தானதாக உள்ளது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியான 71 பேரில் கல்விசாரா பதவியணியின் கீழ் 51 பேரும், கல்விசார் பதவியணியின் கீழ் 20 பேரும் என்ற வகையில் சேவையாற்றி வருகின்றார்கள்.

1.6.1.1. கல்விசார் பதவியணி

கல்விசார் பதவியணியானது பின்வரும் பதவிகளைக் கொண்டுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டில் 05 பதவி வெற்றிடங்கள் இதன் கீழ் காணப்பட்டன.

தொடர் இல.	பதவி	அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை	தற்போதுள்ள பதவியணி	வெற்றிடம்
1.	பணிப்பாளர் (கற்கை மற்றும் அபிவிருத்தி)	**01**	-	**01**
2.	சிரேஷ்ட விரிவுரையாளர்	**04**	**01**	**03**
3.	சிரேஷ்ட நூலகர்	**01**	**01**	**-**
4.	சிரேஷ்ட ஆராய்ச்சியாளர்	**01**	**-**	**01**
5.	விரிவுரையாளர் / உதவி விரிவுரையாளர்	**08**	**08***	**-**
6.	நூலகா;/ உதவி நூலகர்	**01**	**01**	**-**
7.	ஆராய்ச்சியாளா;/ உதவி ஆராய்ச்சியாளர்	**01**	**01**	**-**
8.	கணினி ஆலோசகர்	**03**	**03**	**-**
	முழு மொத்தம்	**20**	**15**	**05**

***** விரிவுரையாளர் ∴ உதவி விரிவுரையாளர்கள் இருவர் பதில் கடமையாற்றுவதன் அடிப்படையில் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவியின் கடமைகளை நிறைவேற்றி வருகின்றார்கள் என்பதுடன், இவர்களில் உதவி விரிவுரையாளர் ஒருவர் சம்பளத்துடனான வெளிநாட்டுக் கற்கை லீவு பெற்றுக் கொண்டுள்ளார்.

கற்கை மற்றும் பயிற்சிப் பாடநெறிகளை திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செய்தல், மேற்படி பாடநெறிகளை நடாத்தல், பாடவிதானம் அபிவிருத்தி, பாடநெறிகளை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள், கூட்டுறவு ஆராய்ச்சி நடவடிக்கைகள், கூட்டுறவு தகவல் முறைமையை பேணிவரும் நடவடிக்கைகள் போன்றன இப்பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

தொழில்சார் பாடநெறிகள் உள்ளடங்களாக விசேட பாடங்களுக்கு மற்றும் விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வெளிவளவாளர்களின் வளப் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், 2024 ஆம் ஆண்டில் சேவை பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிவளவாளர்களின் தகவல்கள் பின்வருமாறாகும்.

தொடர் இல.	பெயர் / பதவி	விடயப்பரப்பு
01	திரு ஹஸ்திக்க நெரஞ்ஜன் வெளி விரிவுரையாளர்	நிதிக் கணக்கீடு, முகாமைத்துவ கணக்கீடு
02	திரு ஏ.பி. புலத்கம, வெளி விரிவுரையாளர்	கூட்டுறவு சட்டம் மற்றும் பொதுச் சட்டம், கணக்காய்வுக்கான சட்டம்
03	திரு பீ.வீ. பதிரண, வெளி விரிவுரையாளர்	வங்கி முகாமைத்துவம், நுண் நிதி கணக்கீடு
04	திரு ஏ.ஆர்.எம். பிஸ்தாமின், வெளி விரிவுரையாளர்	வங்கி முகாமைத்துவம், நுண் நிதி முகாமைத்துவம்
05	திருமதி டி.டி. காந்தி ஜராங்கனீ, வெளி விரிவுரையாளர்	செயன்முறை கூட்டுறவுக் கணக்கீடு, கூட்டுறவு கிராமிய வங்கிக் கணக்கியல்
06	திருமதி கே.டி.எஸ்.ஜி. குலதுங்க, வெளி விரிவுரையாளர்	கணக்காய்வுக் கோட்பாடுகள், கணக்காய்வு நடைமுறை
07	திரு டபிள்யு.எம். சமிந்த விஜேகோன், வெளி விரிவுரையாளர்	விற்பனை மற்றும் விநியோக முகாமைத்துவம்
08	திரு அசங்க வீரசிங்க, வெளி விரிவுரையாளர்	நுண் நிதியீட்டலுக்கான கணக்கீடு, வங்கிச் செயற்பாட்டு முகாமைத்துவம்
09	திரு டி.எம்.டி.எம். திசாநாயக்க, வெளி விரிவுரையாளர்	நிதி முகாமைத்துவம்
10	திரு ஐ.பீ.ஏ, அமரகீர்த்தி, வெளி விரிவுரையாளர்	நுண் நிதியீட்டல்
11	திரு ஆர்.எம்.என்.எஸ். திசாநாயக்க, வெளி விரிவுரையாளர்	நிதி முகாமைத்துவமும், முதலீட்டு முகாமைத்துவமும்
12	திரு ஆர்.ஆர்.வி.ஜி.பி.யு.வீ.டபிள்யு.ஏ. ஹுலங்கமுவா, வெளி விரிவுரையாளர்	வங்கிச் செயற்பாட்டு முகாமைத்துவம்
13	திரு கே.ஆர்.எஸ். பண்டார, வெளி விரிவுரையாளர்	வங்கிச் செயற்பாட்டு முகாமைத்துவம்
14	திரு சமிந்த ஆபெரத்ன வெளி விரிவுரையாளர்	நிதியீட்டல் கணிதல் மற்றும் புள்ளிவிபரவியல்
15	திரு வஜிர சமரகோன், வெளி விரிவுரையாளர்	கண்காய்வு நியமங்களும், நடைமுறையும், கணக்காய்வு அறிக்கையிடல்
16	திரு சுகத் ஹெட்டிஆரச்சி	கணினிக் கணக்கீட்டு முறைமையும், கணக்காய்வும்
17	திருமதி பீ.எஸ். விஜேரத்ன வெளி விரிவுரையாளர்	ஆங்கிலம்
18	திரு எஸ்.டி.பி. ஜயதுங்க வெளி விரிவுரையாளர்	(ஊழஅிரவநச ர்யசனறயசந ரூ நேவறழசமபை)
19	திருமதி நதீகா குமாரி, வெளி விரிவுரையாளர்	புசயிாஅை னுநளபைெ

1.6.1.2. கல்விசாரா பதவியணி

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரான 71 பேரில், கல்விசாரா பதவியணியின் எண்ணிக்கை 51 ஆகும் என்பதுடன், சிரேஷ்ட, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மட்டங்களைச் சேர்ந்த 30 பதவிகள் பின்வருமாறு காணப்படுகின்றன.

2024.12.31 ஆம் திகதியளவில் கல்விசாரா பதவியணியில் 10 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன.

தொடர் இல.	பதவி	அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை	தற்போதுள்ள பதவியணி	வெற்றிடம்
1.	பணிப்பாளர் நாயகம்	01	-	01
2.	பதிவாளர்	01	-	01
3.	உதவிப் பணிப்பாளர் (நிதி)	01	01	-
4.	உதவிப் பணிப்பாளர் (விடுதி)	01	01	-
5.	உதவிப் பதிவாளர்	01	01	-
6.	உள்ளகக் கணக்காய்வாளர்	01	01	-
7.	கணக்கு அலுவலர்	02	02	-
8.	நிருவாக அலுவலர் (நிருவாகம்/ மனிதவளம்)	01	01	-
9.	நிருவாக அலுவலர் (மாணவர் அலுவல்கள்)	01	01	-
10.	நிருவாக அலுவலர் (பரீட்சை)	01	-	01
11.	பெறுகை மற்றும் பராமரிப்பு அலுவலர்	01	01	-
12.	போக்குவரத்து அலுவலர்	01	-	01
13.	சந்தைப்படுத்தல் மேம்பாட்டு மற்றும் அச்சு அலுவலர்	01	-	01
14.	கற்புல, செவிப்புல நிகழ்ச்சித்திட்ட அலுவலர்	01	01	-
15.	விடுதிப் பொறுப்பு அலுவலர்	01	-	01
16.	கணினி நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர்	01	-	01
17.	முறைமை இயக்குநர்	01	-	01
18.	கற்புல செவிப்புல தொழில்நுட்ப உதவியாளர்	01	-	01
19.	அச்சு இயந்திர தொழில்நுட்ப உதவியாளர்	01	-	01
20.	தொழில்நுட்ப உதவியாளர்	01	-	01
21.	முகாமைத்துவ உதவியாளர்	10	03	07
	மொத்தம்	**30**	**13**	**17**

1.6.1.3. கனிஷ்ட பதவியணி

கனிஷ்ட பதவியணிக்கு 21 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், 2024.12.31 ஆம் திகதிக்குக் காணப்பட்ட பதவிகள் மற்றும் வெற்றிடங்கள் பின்வருமாறாகும்.

தொடர் இல.	பதவி	அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை	தற்போதுள்ள பதவியணி	வெற்றிடங்களின் எண்ணிக்கை
01.	சாரதி	06	04*	02
02.	சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர்	01	01	-
03.	அலுவலக சிற்றூழியர்	14	05	09
	மொத்தம்	21	10	11

* சாரதி ஒருவர் சம்பளம் அற்ற வெளிநாட்டு லீவு பெற்றுள்ளார்.

1.6.2. நிறுவகத்தின் பௌதீக வளங்கள்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகமானது சுமார் 22 ஏக்கர் காணிப்பகுதியில் போதியளவு வசதிகளைக் கொண்டதாக தாபிக்கப்பட்டுள்ளது. அலுவலக வளவு, கேட்போர்கூடம், விரிவுரை மண்டபம், கணினி ஆய்வுகூடம், விடுதி, உணவுச்சாலை, நூலகம், உத்தியோகபூர்வ இல்லங்கள், சுற்றுலா விடுதி, அச்சகம், கற்புல, செவிப்புல வசதிகள், வாகனத் தரிப்பிட வசதிகளைக் கொண்டதாக கற்கை நிறுவகத்திற்குத் தேவையான சகல வசதிகளையும் கொண்டுள்ளது. விரிவான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1.6.2.1 மகிந்த ராஜபக்ஷ கேட்போர்கூடம்

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான செயலமர்வுகள், கருத்தரங்குகள், வைபவங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகளை நடாத்துவதற்குப் போதியளவு வசிதகளைக் கொண்டதாக கணினிமயப்படுத்தப்பட்ட அதிநவீன ஒலி உபகரணங்களைக் கொண்ட கட்டமைப்பு, ஒளியூட்டும் கட்டமைப்பு, முழுமையாக வளிச்சீராக்கல் செய்யப்பட்டுள்ளதும், 1120 சொகுசு ஆசனங்களை கொண்டதுமாக இது காணப்படுவதுடன், இந்தக் கேட்போர் கூடத்தில் தனியான 72 ஆசனங்களைக் கொண்ட இரண்டு கருத்தரங்கு மண்டபங்களும் காணப்படுகின்றன.





நவீன தளபாடங்களைக் கொண்ட உணவக வசதியும் இதில் உள்ளடங்குவதுடன், ஒரே தடவையில் 250 வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான வாகனத் தரிப்பிட வசதியும் இதில் உள்ளடங்குவதுடன், 2024 ஆம் ஆண்டில் ரூபா 12,049,190.00 ஆன தொகை இதன் மூலம் உழைக்கப்பட்டது.

விபரம்	இடவசதி
முழுக் கட்டிடத்தின் சதுர அளவு	3723.63 சதுர மீற்றர்
பிரதான கேட்போர்கூடம் (பெல்கனி மற்றும் கீழ் மாடி)	1505.5 சதுர மீற்றர்
பிரதான மேடை	259 சதுர மீற்றர்
கேட்போர்கூட ஆசனங்களின் எண்ணிக்கை	1120
விருந்தினர்களுக்கான ஓய்வறை	1000 சதுர மீற்றர்
அலுவலக இடவசதிகள்	240 சதுர மீற்றர்
விரிவுரை மண்டபம் மற்றும் ஏனைய கலைஞர்களுக்கான இடவசதிகள்	719.13சதுர மீற்றர்

1.6.2.2 பிரதான மண்டபம் (வின்சன்ட் சுபசிங்க மண்டபம்)

பிரதான மேடையைக் கொண்ட 450 ஆசனங்களுடனான இந்த மண்டபம் கற்புல செவிப்புல உபகரண வசதிகளுடன் கருத்தரங்குகள், மேடை நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், பரிசளிப்பு வைபவங்கள் மற்றும் செயன்முறை நடவடிக்கைகளைக் கொண்ட செயலமர்வுகளுக்கு சேவை வசதிகளை வழங்குவதற்கு உகந்த மண்டபமாகும்.

1.6.2.3 விரிவுரை மண்டபங்கள்

வளிச்சீராக்கல் செய்யப்பட்ட விரிவுரை மண்டபங்கள்

- **ரத்நாயக்க மண்டபம்**

வளிச்சீராக்கல் செய்யப்பட்டதும் கருத்தரங்குகளுக்கு "யூ" வடிவிலான மேசைகளைக் கொண்டதும் மற்றும் வசதியான 55 ஆசனங்களைக் கொண்டதுமான இந்த மண்டபம் கற்புல, செவிப்புல வசதிகள், OHP, White Board, Clip Board, Chart Board உள்ளிட்ட பயிற்சிச் செயலமர்வுகள், உள்நாட்டு வெளிநாட்டுக் கருத்தரங்குகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான வசதிகளை கொண்டுள்ளது.



- **ரொச்சிடேல் மண்டபம்**



மேடையைக் கொண்ட வளிச்சீராக்கல் செய்யப்பட்ட இந்த மண்டபம் மேசைகள் மற்றும் வசதியான 60 ஆசனங்களைக் கொண்டதும், மேசை இல்லாத 100 ஆசனங்களைக் கொண்டதுமாக சேவை வசதிகளை வழங்கக்கூடியதாக உள்ளதுடன், இந்த மண்டபம் கற்புல, செவிப்புல வசிதகள், OHP, White Board, Clip Board, Chart Board, உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், குழுச் செயற்பாடுகள், விரிவுரை போன்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் கொண்டதாக பூரணமான மண்டபமாக உள்ளது.

- **C-1 மண்டபம்**

வளிச்சீராக்கல் செய்யப்பட்ட இந்த மண்டபமானது வசதியான 40 ஆசனங்களைக் கொண்டுள்ளதுடன், Multimedia Screen, OHP, White Board, Clip Board, Chart Board உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்தவாறான வசதிகளைக் கொண்டுள்ளது.

- **C-2 மண்டபம்**

வளிச்சீராக்கல் செய்யப்பட்ட இந்த மண்டபமானது வசதியான 40 ஆசனங்களைக் கொண்டுள்ளதுடன், Multimedia Screen, OHP, White Board, Clip Board, Chart Board உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்தவாறான வசதிகளைக் கொண்டுள்ளது.

- **C-3 மண்டபம்**

வளிச்சீராக்கல் செய்யப்பட்ட இந்த மண்டபமானது வசதியான 20 ஆசனங்களைக் கொண்டுள்ளதுடன், Multimedia Screen, OHP, White Board, Clip Board, Chart Board உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்த வசதிகளைக் கொண்டுள்ளது.

- **பல்தேவைக் கட்டிடம் - விரிவுரை மண்டப இலக்கம் 04, 05 மற்றும் கீழ் மாடி**

பல்தேவைக் கட்டிடத்தின் இந்த மண்டபங்கள் மற்றும் கீழ் மாடி என்பவற்றை நிறுவக சட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய வகையில் நிறுவகத்திற்கு வருமானம் உருவாக்கத்துடன் வெளி நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

<u>வளிச்சீராக்கல் செய்யப்படாத விரிவுரை மண்டபங்கள்</u>

- **புதிய ரொச்சடேல் மண்டபம்**

இந்த மண்டபமானது 60 மாணவர் மேசைகள் மற்றும் ஆசனங்களைக் கொண்டுள்ளதுடன், Multimedia Screen, OHP, White Board, Clip Board, Chart Board உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்தவாறான வசதிகளைக் கொண்டுள்ளது.

- **B மண்டபம்**

இந்த மண்டபமானது 80 மாணவர் மேசைகள் மற்றும் ஆசனங்களைக் கொண்டுள்ளதுடன், Multimedia Screen, OHP, White Board, Clip Board, Chart Board உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்தவாறான வசதிகளைக் கொண்டுள்ளது.

- **பல்தேவைக் கட்டிடம் - விரிவுரை மண்டப இலக்கம் 01**

இந்த மண்டபமானது வசதியான 35 ஆசனங்களைக் கொண்டுள்ளதுடன், White Board, Clip Board, Chart Board உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்த வசதிகளைக் கொண்டுள்ளது.

- **பல்தேவைக் கட்டிடம் - விரிவுரை மண்டப இலக்கம் 02**

இந்த மண்டபமானது வசதியான 30 ஆசனங்களைக் கொண்டுள்ளதுடன், White Board, Clip Board, Chart Board உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்தவாறான வசதிகளைக் கொண்டுள்ளது.

- **பல்தேவைக் கட்டிடம் - விரிவுரை மண்டப இலக்கம் 03**

இந்த மண்டபமானது வசதியான 40 ஆசனங்களைக் கொண்டுள்ளதுடன், White Board, Clip Board, Chart Board உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்தவாறான வசதிகளைக் கொண்டுள்ளது.

1.6.2.4 கணினி ஆய்வுகூடம்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவானது, மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள அரச மற்றும் தனியார் துறையிலுள்ள மிகச் சிறந்த கணினி நிலையமொன்றாகும்.

இரண்டு பிரிவுகளின் கீழ் இயங்கி வருகின்ற கணினிப் பிரிவு கூட்டுறவுத் துறையின் கல்வி பயில்வோரை இலக்காகக் கொண்டு நடாத்தப்படுகின்ற பாடநெறிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன், பிரதான வளவிலுள்ள கணினி நிலையத்தில் 51 கணினிகள் ஒதுக்கப்பட்டு கற்கை வாய்ப்புகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.




பாடசாலைக் கல்வியைப் பயிலும் மற்றும் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து தகவல் தொழில்நுட்பத் துறையில் பிரவேசிக்கும் எதிர்பார்ப்புடன் உயர் பாடநெறிகளை தேடுகின்ற பிள்ளைகளுக்கான பாடநெறிகளை வழிப்படுத்தும் மற்றும் தொழில்சார் பாடநெறிகளின் தகவல் தொழில்நுட்ப பாடத்தை உள்ளடக்கியதாக பல்தேவைக் கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப நிலையத்தில் 34 கணினிகள் மாணவர்களின் உபயோகத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

1.6.2.5 நூலகம்



நிறுவகத்தின் நூலகம் இந்நாட்டின் கூட்டுறவுத் துறைக்கு உரித்தான வளர்ச்சியடைந்த நூலகமாகக் கருதப்படுகின்றது. பல்வேறு துறைகளிலும் எழுதப்பட்டுள்ள தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம்மிக்க நூல்கள், பருவகால சஞ்சிகைகள் என்பன சுமார் இருபத்தோராயிரம் இங்கு காணப்படுகின்றன. மேலும் இங்கு கூட்டுறவுத் துறை சம்பந்தமான நூல்களின் தொகுதியொன்று தனியாக பேணிவரப்படுவதுடன், பத்திரிகை ஆக்கங்கள், சஞ்சிகைகளின் தொகுப்பொன்றும் பேணிவரப்படுகின்றது. நூலக சூசிகை கணினிமயப்படுத்தப்பட்டு வருகின்றது.

நூலக சேவைக்கு உரித்தான இணையத்தள வசதிகளையும் வாசகர்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

1.6.2.6. விடுதிகள்

வளிச்சீராக்கல் செய்யப்பட்ட மற்றும் செய்யப்படாத அறைகளை கொண்டதாக தனியான மற்றும் இருவருக்கான அறை வசதிகளுடன் ஒரே தடவையில் 222 பேருக்கு விடுதி வசதிகளை பெற்றுக் கொடுக்கக்கூடியதாக 7 விடுதிகள் இங்கு காணப்படுகின்றன. விடுதி வசதிகளுக்கு மேலதிகமாக கூட்டுறவுத்துறை, அரச துறை மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த ஆட்கள் 08 பேருக்கு தங்குமிட வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான சகல வசதிகளையும் கொண்ட சுற்றுலா விடுதியும் விடுதிப் பிரிவுக்கு உரித்தானதாகக் காணப்படுகின்றது.

- **ரத்நாயக்க விடுதி**

இந்த விடுதி முழுமையாக வளிச்சீராக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு பேருக்கான 12 அறைகளைக் கொண்டுள்ளது. இதில் குளியல் அறை வசதிகளைக் கொண்டதாக 08 அறைகளும், பொதுக் குளியல் அறை வசதிகளைக் கொண்டதாக 4 அறைகளும் காணப்படுகின்றன. இந்த ஒட்டுமொத்த விடுதியில் ஒரே தடவையில் 24 பேருக்கான தங்குமிட வசதிகள் காணப்படுகின்றன.

- **புதிய ரத்நாயக்க விடுதி**

முழுமையாக வளிச்சீராக்கல் செய்யப்பட்டுள்ள இந்த விடுதியில், இருவருக்கான 04 அறைகள் மற்றும் 16 தனி நபர் அறைகள் காணப்படுவதுடன் இதன் சகல அறைகளும் குளியல் அறை வசதிகளைக் கொண்டதாக காணப்படுகின்றன. இந்த விடுதியில் ஒரே தடவையில் 24 பேருக்கான தங்குமிட வசதிகள் காணப்படுகின்றன.

- **ரத்நாயக்க இல்லம்**

இங்கு இரண்டு வீடுகள் காணப்படுவதுடன் ஒரு வீட்டில் 03 அறைகள் வீதம் குளியல் அறை வசதிகள் சகிதம் இரண்டு வீடுகளிலும் 14 பேருக்கான தங்குமிட வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.


- **D/E/F/G விடுதி**

04 விடுதிக் கட்டிடங்களில் இருவர் தங்கும் 72 அறைகள் காணப்படுவதுடன், இந்த விடுதியில் ஒரே தடவையில் 144 பேருக்கான தங்குமிட வசதிகளைப் பெற்றுக் கொடுக்க முடியும். ஒவ்வொரு விடுதிக்கும் தனியான பொதுக் குளியல் அறைகள் காணப்படுகின்றன.

- **H விடுதி**

இந்த விடுதி மூன்று பேர் இருக்கக்கூடிய 06 அறைகள் மற்றும் பொதுக் குளியல் அறையும் உள்ளதுடன், 18 பேருக்கு ஒரே தடவையில் தங்குமிட வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

1.6.2.7. உணவுச்சாலை



பயிற்சிச் செயலமர்வுகள், கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் வைபவங்களில் பங்கேற்கும் விருந்தினர்களுக்கும், நிறுவகத்தின் ஏனைய உள்ளக பயிலுனர்கள் மற்றும் பதவியணியினருக்கும் சுகாதார ரீதியாக உணவும், குடிபானமும் தயார் செய்து வழங்குவதற்கான உணவுச்சாலை சேவை பேணிவரப்படுகின்றது. மதிய மற்றும் இரவு நேரங்கள் இரண்டிலும் உள்நாட்டு, வெளிநாட்டு உணவு வகைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அனுபவம்வாய்ந்த பதவியணியினர் நடவடிக்கை மேற்கொள்கின்றார்கள். முழுமையாக ரயில் பதிக்கப்பட்டு நவீன தளபாடங்களைக் கொண்டதாக பூபே முறையில் உணவு பரிமாறும் உணவுச்சாலையில் எப்பொழுதும் உயர் மட்ட சுகாதார நடைமுறைகள் பேணிவரப்படுகின்றன. ஒரே தடவையில் சுமார் 200 பேருக்கு அமர்ந்து உணவு பரிமாறும் வசதிகள் காணப்படுகின்றன.

1.6.2.8.சுற்றுலா விடுதி

வரலாற்று முக்கியத்துவமிக்க தளதா மாளிகைக்கு சுமார் 08 கிலோ மீற்றர் தூரத்திலிருந்து இலகுவாக சென்றடையக்கூடிய கண்டி – மடவளை ஊடாக வத்தேகம வீதியில் மகாவளி அணைக்கட்டுக்கு அருகாமையில் மற்றும் மகிந்த





ராஜபக்ஷ கேட்போர் கூடத்திற்கு அருகாமையில் இந்த சுற்றுலா விடுதி அமைந்துள்ளது.

வளிச்சீராக்கல் செய்யப்பட்ட பிரதான அறைகள் இரண்டும்இருவருக்கான இரண்டு அறைகளும்) சொகுசு சோபா மற்றும் உணவு மேசையைக் கொண்டதும் வளிச்சீராக்கல் செய்யப்பட்ட இருக்கை அறையைக் கொண்டதுமாக இது காணப்படுகின்றது.

தும்பர பள்ளத்தாக்கில் எப்பொழுதும் நிலவும் இதமான காலநிலை மற்றும் சுற்றுலா விடுதியைச் சூழ்ந்ததாகக் காணப்படுகின்ற முற்று முழுவதும் திறந்த வெளியைக் கொண்ட சுதந்திரமான, பசுமையான அமைதிச் சூழல் குடும்பத்தவர்கள் மற்றும் நெருக்கமானவர்களுடன் மனக்கவலைகளை மறந்து இருப்பதற்கு மிகவும் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது.

1.6.2.9. அச்சகம் மற்றும் கற்புல செவிப்புல வசதிகள்



ஒவ்செட் அச்சு மற்றும் டுப்ளோ அச்சு வசதிகளைக் கொண்டதாக உள்ள நிறுவனத்தின் அச்சகமானது அதற்குத் தேவையான ஏனைய இயந்திரங்கள் மற்றும் வசதிகளைக் கொண்டுள்ளதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் நிறுவகத்தின் மற்றும் கல்வி பயில்வோரின் அச்சுத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

மேலும், எதிர்காலத்தில் அரச, கூட்டுறவுத்துறை மற்றும் தனியார் துறையினருக்கும் அச்சுசார்ந்த சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் பிரிவாக இதனை விஸ்தரிக்க வேண்டிய தேவையும் இனங்காணப்பட்டுள்ளது.

கூட்டுறவு விடயம் தொடர்பில் நடாத்தப்படுகின்ற பல்வேறு பாடநெறிகள் மற்றும் வெளி நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான கற்புல, செவிப்புல வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. விரிவுரை மண்டபங்களுக்கான ஹெட் புரொஜெக்டர்ஸ், மல்ரிமீடியா இயந்திரங்கள், கற்புல, செவிப்பு உபகணரங்கள் போன்ற தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் "வீடியோ" செய்வதைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் "மைக்ரோ ரீசின்" தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் வசதியையும் இப்பிரிவிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், வீடியோ திரைப்படங்களை காட்சிப்படுத்தும் வசதிகளையும் பெற்றுக் கொள்ளலாம். கூட்டுறவுத் துறை தொடர்பில் நடாத்தப்படுகின்ற பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் வைபவங்களின் விசேட நிகழ்வுகளை உள்ளடக்கியதாக புகைப்படத் தொகுப்பொன்றைப் பேணிவருவதும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மற்றொரு சேவையாகும்.

1.6.2.10. உத்தியோகபூர்வ இல்லங்கள்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள செயற்பணியை நிறைவேற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கென நிறுவகத்திற்கு உரித்தானதாகக் காணப்படுகின்ற உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை 19 ஆகும். குறித்த உத்தியோகபூர்வ

இல்லங்களின் எண்ணிக்கை மற்றும் தன்மைக்கு அமைய அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1.6.2.11. வாகனத் தரிப்பிட வசதிகள்

மகிந்த ராஜபக்ஷ கேட்போர்கூட வளவில் ஒரே தடவையில் சுமார் 250 வாகனங்களை இலகுவாக நிறுத்திவைப்பதற்கான வசதிகள் காணப்படுவதுடன், பாதுகாப்பு அதிகாரிகள் கடமையில் ஈடுபட்டுள்ள 03 நுழைவாயில்கள் காணப்படுகின்றன. தலைமை அலுவலக வளவில் நிறுவனம் மற்றும் அலுவலக நடவடிக்கைகளுக்காக வருகைதருகின்ற வெளியாரின் சுமார் 100 வாகனங்களை நிறுத்திவைப்பதற்கான வசதிகள் காணப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக கொடுப்பனவு நடவடிக்கைகளை மென்மேலும் இலகுபடுத்துவதற்காக மக்கள் வங்கியின் கிளையொன்றும், ஏரீஎம் (ATM) இயந்திரமொன்றும் நிறுவன வளவில் தாபிக்கப்பட்டுள்ளன.

1.7. நிறுவகத்தின் பாடநெறிகள்


தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தினால் பின்வருமாறு 147 பாடநெறிகளை நடாத்த திட்டமிடப்பட்டிருந்ததுடன், 54 பாடநெறிகள் ஆண்டினுள் நடாத்தப்பட்டுள்ளன.

உயர் டிப்ளோமா பாடநெறிகள்	01
டிப்ளோமா பாடநெறிகள்	13
சான்றிதழ் பாடநெறிகள்	07
குறுங்கால பாடநெறிகள்	47
*இலவசமாக நடாத்தப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	80
மொத்தம்	147

*அரச செலவின முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு அமைய மற்றும் திறைசேரியின் ஏற்பாடுகள் கிடைக்காமை காரணமாக இலவசமாக நடாத்தத் திட்டமிடப்பட்ட 80 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்த முடியவில்லை.

1.7.1. 2022 – 2024 காலப்பகுதியில் பாடநெறிகளை நடாத்துவதன் முன்னேற்றம்

		2022	2023	2024
01	டிப்ளோமா பாடநெறிகள்	9	8	6
02	சான்றிதழ் பாடநெறிகள்	3	5	3
03	குறுங்கால பாடநெறிகள்	18	44	45
		30	57	54



1.7.2. டிப்ளோமா பாடநெறி

கூட்டுறவு சங்க அலுவலர்களுக்கான 05 டிப்ளோமா பாடநெறிகளும், கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்கள் மற்றும் கூட்டுறவல்லாத தரப்பினர்களுக்கான தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியும் 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன.

1. வியாபார முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி
2. கணக்காய்வு டிப்ளோமா பாடநெறி
3. வங்கி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி
4. மனித வள முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி
5. கணக்கீட்டு டிப்ளோமா பாடநெறி

1.7.2.1 வியாபார முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி

இலங்கையின் கூட்டுறவுத் தொழில்முயற்சிகளின் பிரதம நிறைவேற்றுநர், நடுத்தர நிறைவேற்றுநர் மற்றும் நிறைவேற்றுநர் மட்டத்தில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு தமது கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அமைப்புக்களை முகாமைத்துவம் செய்யும் போதும், அது தொடர்பிலான தீர்மானங்களை மேற்கொள்ளும் பணியின் போதும் தீவிர கவனத்துடன் உரிய நிலைமைகளுக்கு ஏற்றவாறு தமது அமைப்புக்களை வழிப்படுத்துவது தொடர்பிலான அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கு, நடைமுறைகளை அபிவிருத்தி செய்துகொடுக்கும் நோக்கத்துடன் இந்தப் பாடநெறி தயார் செய்யப்பட்டுள்ளது.

1.7.2.2 கணக்காய்வு டிப்ளோமா பாடநெறி

இலங்கை கூட்டுறவுத்துறையில் தாபிக்கப்பட்டுள்ள நல்லாட்சிப் பணியொன்றை மதிப்பீடு செய்யும் முக்கியமானதொரு அளவுகோளாக கணக்காய்வுப் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களை குறிப்பிட முடியும். அதற்கமைய கணக்காய்வு கடமைகளில் ஈடுபடுகின்ற வெளியார் மற்றும் உள்ளக கணக்காய்வாளர்களுக்கு தமது கடமை நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ளத் தேவையான அறிவு,

திறமை, மனப்பாங்கு மற்றும் நடைமுறைகளை அபிவிருத்தி செய்துகொள்ளும் நோக்கத்துடன் இந்த டிப்ளோமா பாடநெறி திட்டமிடப்பட்டுள்ளது.

1.7.2.3 வங்கி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் பிரதான வகிபாகமொன்றான கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அலுவலர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் வங்கி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறைவேற்று மற்றும் நடுத்தர முகாமைத்துவ மட்டத்திலான அலுவலர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன், இந்தப் பாடநெறி திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, கூட்டுறவு கிராமிய வங்கிகள், சனச வங்கிகள் மற்றும் வேறு கூட்டுறவு வங்கிச் சங்கங்களில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு மற்றும் நிதி நிறுவனங்களின் அலுவலர்களுக்கு தமது தொழில்சார் திறமைகளை வளர்த்துக் கொள்ளத் தேவையான அடிப்படையை பெற்றுக் கொடுப்பது இந்த பாடநெறிகளின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

1.7.2.4 மனித வள முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி

கூட்டுறவு அமைப்புக்களில் நல்லதொரு செயலாற்றுகையை அடைந்து கொள்வதற்கு முறையாக மனிதவளத்தை முகாமைத்துவம் செய்வது அத்தியாவசியமான அம்சமொன்றாகும். அதற்கமைய மனித வள முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி வடிவமைக்கப்பட்டிருப்பது இலங்கையின் கூட்டுறவுத் தொழில்முயற்சிகளில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அலுவலர்களுக்கு மனிதவள முகாமைத்துவம் பற்றி மிகவும் பரந்ததொரு செயன்முறைசார் மற்றும் விடயரீதியான அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்காகவாகும்.

1.7.2.5 கணக்கீட்டு டிப்ளோமா பாடநெறி

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அமைப்புக்களின் நிதிசார் செயற்பாடுகளை அமுல்படுத்துவது தொடர்பில் நியமனம் செய்யப்பட்டுள்ள பிரதம நிறைவேற்று அலுவலர்கள் என்ற வகையில் கணக்காளர்களின் கடமை நடவடிக்கைகளின் தரத்தை வளர்ப்பது தொடர்பாக கணக்கீட்டுப் பணிகள் பற்றிய அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கினை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படுகின்ற டிப்ளோமா பாடநெறியாக இந்தக் கணக்கீட்டு டிப்ளோமா பாடநெறியை அறிமுகம் செய்ய முடியும்.

1.7.3 <u>சான்றிதழ் பாடநெறிகள்</u>

1.7.3.1 கணினிப் பிரயோக உதவிச் சான்றிதழ் பாடநெறி- (CAA – NVQ Level 03)

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் கணினிப் பிரிவினால் கணினிப் பிரயோக உதவிச் சான்றிதழ் பாடநெறி, தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 03 இன் கீழ் நடாத்தப்படுகின்றது. அதற்கு கணினி அறிவை எதிர்பார்த்துள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும். கணினிப் பிரயோக பயன்பாட்டிலுள்ள ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதற்கும், தொழில்சார் தகைமையொன்றாக தகைமைகளை வளர்த்துக் கொள்வதற்கும் இப்பாடநெறி நடாத்தப்படுகின்றது.

1.7.3.2 ஆங்கில சான்றிதழ் பாடநெறி

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் கணினிப் பிரிவினால் அமுல்படுத்தப்படுகின்ற ஆங்கில சான்றிதழ் பாடநெறி அன்றாட கடமை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான ஆங்கில மொழியை நல்ல

முறையில் கையாள்வதற்கு, புரிந்து கொள்வதற்கு மற்றும் எழுதுவதற்குத் தேவையான சகல முறையியல்களுடனும் தயார் செய்யப்பட்ட மேற்படி பாடநெறிக்கு ஆங்கில அறிவை எதிர்பார்த்துள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

1.7.4 குறுங்கால பாடநெறிகள்

2024 ஆம் ஆண்டில் வருடாந்த பாடநெறித் திட்டத்தில் உள்ளடங்கும் 46 குறுங்கால பாடநெறிகளில் 25 பாடநெறிகள் நடாத்தப்பட்டதுடன், வெளியாரின் கோரிக்கைகளின் பேரில் 20 குறுங்கால பாடநெறிகள் நடாத்தப்பட்டன.

1.7.4.1 செயலாளர் நடைமுறை பற்றிய குறுங்கால பயிற்சிச் செயலமர்வு

இந்த செயலமர்வின் போது கூட்டுறவு சங்கமொன்றின் செயலாளரின் கடமைசார் வகிபாகம் தொடர்பான சட்ட ரீதியான நிலைமைகள் உறுப்பினர் பெயர்ப் பட்டியல்களை இற்றைப்படுத்தி பேணிவருதல், செயலாளர் பதவியின் கடமைகளை ஒழுங்கு செய்தல் மற்றும் அறிக்கையிடல், உறுப்பினர் தொடர்புகளை பேணிவருதல் போன்ற விடயப்பரப்புக்கள் பற்றி அனுபவம்வாய்ந்த வளவாளர்களினால் கோட்பாடுசார் மற்றும் செயன்முறை செயற்பாடுகளுடன் இந்த செயலமர்வு நடாத்தப்பட்டது.

1.7.4.2 கிராமிய வங்கி உள்ளக கணக்காய்வுப் பயிற்சிச் செயலமர்வு

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிராமிய வங்கிப் பிரிவில் உள்ளகக் கட்டுப்பாடு பலமடைவதற்கு பிரதான செயற்பணியொன்றை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிறைவேற்றி வருகின்றது. அண்மைக் காலத்தில் கிராமிய நிதிக் கூட்டுறவுச் சங்கங்களில் காணப்படுகின்ற பலவீனங்கள் மற்றும் மோசடிகள், ஊழல்களை குறைத்துக் கொள்வதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் பாரிய செயற்பணியொன்றை ஆற்ற வேண்டியுள்ளது. இதற்காக உள்ளகக் கணக்காய்வை வலுவூட்டும் பொருட்டு அதில் ஈடுபட்டுள்ள பதவியணியினரை அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்கள் மிக்கவர்களாக மாற்றியமைப்பதை நோக்காகக் கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதில் பயிலுனர்கள் 39 பேர் கலந்துகொண்டார்கள் என்பதுடன், ஒன்லையின் முறையில் இது நடாத்தப்பட்டது. இதன் மூலம் ரூபா 261,300.00 ஆன தொகை உழைத்துக் கொள்ளப்பட்டது.

1.7.4.3 சட்டப் பிரதிநிதிகளுக்கான பயிற்சிச் செயலமர்வு

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும் இன்றளவில் பெரும்பாலான பிணக்குகள் அதாவது நிதி மோசடி, பல்வேறு பிணக்குகள் என்ற வகையில் கூடுதலாகக் காணப்படுகின்றன. இந்த பிணக்குகளை தீர்த்துவைப்பது தொடர்பாக நியாயாதிக்க கடமைகள் பல கூட்டுறவுச் சட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், தற்போது கூட்டுறவுச் சங்கத் தரப்பினராக ஆஜராகும் சட்டப் பிரதிநிதி அலுலவர்கள் குறைந்த மட்டத்திலேயே உள்ளார்கள். இதன் காரணமாக சங்கத்தினுள் ஏற்படுகின்ற பிணக்குகளை தீர்த்துவைப்பதற்கு நீண்ட காலமும், அதிக செலவினத்தையும் தாங்கிக் கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவுச் சங்கங்களில் எதிர்கால தீர்மானங்களை மேற்கொள்ளல் மற்றும் அபிவிருத்தித் தீர்மானங்களை மேற்கொள்வதிலும் அசௌகரியமான நிலை எழுந்துள்ளது.

அதற்கமைய, கூட்டுறவுச் சங்கத்தின் சட்டப் பிரதிநிதியாக நடவடிக்கை மேற்கொள்ளக்கூடிய திறமையான மற்றும் நேர்மையான அலுவலர் ஒருவர் இருப்பது மிக முக்கிய பணியாகும் என்று உணரப்படுகின்றது. அதன் மூலம் சங்கத்தின் மேலே குறிப்பிடப்பட்ட நியாயாதிக்க தேவைப்பாட்டை சட்ட ரீதியாகவும், உச்சளவான பொறுப்புடனும் நிறைவேற்றும் ஆற்றலைக் கொண்ட சட்டப் பிரதிநிதி ஒருவரை உருவாக்க வேண்டியதன் தேவையின் அடிப்படையில் பல்வேறு துறைகளின் கீழ் இந்த செயலமர்வு நடாத்தப்படவுள்ளது.

1.7.4.4 கிராமிய வங்கிக் கடன் முகாமைத்துவம் பற்றிய பயிற்சிச் செயலமர்வு

கிராமிய நிதி நிறுவனங்களில் பிரதானமாக முகாமைத்துவம் செய்ய வேண்டிய பணியாக இருப்பது உறுப்பினர்களின் கடனை முகாமைத்துவம் செய்வதாகும். நிறுவனத்தின் நிலைபேறானதன்மைக்கு பிரதானமாக தாக்கம் செலுத்தும் காரணியாக இருப்பது தரமான கடன் முறையைப் பேணிவரவேண்டிதயன் அவசியத்தன்மையாகும். இதற்காக கிராமிய நிதி நிறுவனங்களிலுள்ள வெளிக்கள அலுவலர்கள் சிறந்த அறிவைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதற்காக இப்பாடநெறியின் மூலம் இலக்காகக் கொள்ளப்படுவது அவ்வாறான அலுவலர்கள் குழுவை பயிற்றுவித்து இத்துறைக்கு விடுவிப்பதாகும். மேலும், நிதி நிறுவனமொன்று சிறந்த கடன் கலாசாரத்தை ஏற்படுத்திக் கொண்டு வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய முறையியல்கள் பற்றி இந்தப் பாடநெறியின் போது கலந்துரையாடப்படுகின்றது. அதற்கமைய இப்பாடநெறியை, நிறுவனத்தின் நிலைபேறான தன்மையைப் பேணிவருதல் மற்றும் நிறுவனத்தின்முகாமைத்துவத்துக்கு அதன் நிருவாகத்தை இலகுபடுத்துகின்ற கட்டாயமாக கிராமிய நிதி நிறுவனங்களின் அலுவலர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடநெறியாகும் என அறிமுகம் செய்ய முடியும். இதில் பயிலுனர்கள் 53 பேர் பங்கேற்றார்கள் என்பதுடன், பாடநெறி வருமானம் ரூபா 355,100.00 ஆகும்.

1.7.4.5 அடகு முகாமைத்துவம் பற்றிய பயிற்சிச் செயலமர்வு

கிராமிய வங்கித்துறையின் பிரதான வருமான வழிமுறையாக அடகு வட்டி வருமானத்தை குறிப்பிட முடியும். எனினும் இந்த வியாபாரப் பணியின் போது பல்வேறு சிக்கலான நிலைமைகளுக்கு முகம் கொடுத்துள்ளதனால் மேற்படி அடகுத் துறையில் ஈடுபடுகின்ற மனிதவளத்தின் அறிவு, திறமைகளை இற்றைப்படுத்த வேண்டும்.

குறிப்பாக அடகு வைத்தல் சட்டங்கள், விதிகள், சுற்றறிக்கைகள் அடிக்கடி மாற்றமடைவதன் காரணமாக அதற்கமைய இது தொடர்பிலான செயற்பாடுகளின் முகாமைத்துவமும் இற்றைப்படுத்தப்படல் வேண்டும். மேலும் தங்க ஆபரணங்களை அடகாகக் பெறும் போது நியம தரத்தைக் கொண்ட அடகு பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் இதனை முறையாக மேற்கொள்ளாத பட்சத்தில் பாரியளவில் நிதிசார் நட்டங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். இதில் பயிலுனர்கள் 21 பேர் பங்குபற்றினார்கள் என்பதுடன், பாடநெறி வருமானம் ரூபா 140,700.00 ஆகும்.

1.7.4.6 சனச சங்கங்களுக்கான கணக்கீடு

இலங்கையின் கூட்டுறவுத்துறை பற்றி கவனம் செலுத்தும் போது 8000 இற்கும் மேற்பட்ட சங்கங்கள், சனச அமைப்பை பிரதிநிதித்துவம் செய்கின்றன. இந்நாட்டில் சகல கிராமங்களிலும் ஒரு சனச சங்கத்தை இனங்காணப முடிவது இதன் காரணமாகவாகும். இந்நாட்டில் காணப்படுகின்ற சனச சங்கங்கள் பரவலாக முகம் கொடுக்கின்ற ஒரு சிக்கலாக எமக்கு இனங்காண முடிவது வங்கிகளின் செயற்பாட்டு நடவடிக்கைகள் பலவீனமானதாக இருப்பதாகும். இதில் தாக்கம் செலுத்தியிருப்பது சனச சங்கங்களின் முறையான கணக்கீட்டு முறையொன்று பயன்படுத்தப்படாமை, நியம கணக்கீட்டு வழிகாட்டல்களுக்கு முரணாக கணக்குகள் பேணிவரப்படுகின்றமை போன்றனவாகும். எனவே, சனச சங்கங்களில் நடைமுறையில் கணக்கீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அலுவலர்களின் அறிவை மேம்படுத்தல் மற்றும் பணிகளில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் காலத்தின் தேவையாகும் என்பது தெரிகின்றது. இதில் பயிலுனர்கள் 39 பேர் பங்கேற்றார்கள் என்பதுடன், பாடநெறி வருமானம் ரூபா 168,550.00 ஆகும்.

1.7.4.7 எம்எஸ் எக்செல்

மேலுள்ள குறுங்கால பாடநெறியின் நோக்கமாக இருப்பது மைக்ரோசொவ்ட் எக்செல் செயலியை இலகுவாக பயன்படுத்தத் தேவையான செயன்முறை அறிவை பங்குபற்றுனர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதாகும். இதன் மூலம் கணக்கீட்டு அறிக்கைகளை பொழிப்புரையாக வரைபுகளின் மூலம் வெளிப்படுத்தும் ஆற்றல் கிடைக்கும் இப்பாடநெறியில் பயிலுனர்கள் 16 பேர் பங்குபற்றினார்கள் என்பதுடன், பாடநெறி வருமானம் ரூபா 48,000 ஆகும்.

1.7.4.8 தொழில்வல்லுனர்களுக்கான உயர் கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்பு பற்றிய பாடநெறி

அலுவலக சூழலில் கணினியைப் பயன்படுத்தும் போது அதற்குரிய கணினி வன்பொருட்களை சரியாக இனங்காணல், குறைகளை தீர்த்துக் கொள்ளல் மற்றும் கணினி வலையமைப்பில் வன்பொருள் மற்றும் பொதுவாக உபயோகத்திற்குத் தேவையான செயன்முறை அறிவைப் பெற்றுக் கொடுப்பது இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இப்பாடநெறியில் பயிலுனர்கள் 18 பேர் பங்குபற்றினார்கள் என்பதுடன், பாடநெறி வருமானம் ரூபா 155,700.00 ஆகும்.

1.7.4.9 கூட்டுறவுச் சங்கங்களின் வரவு செலவுத்திட்ட மதிப்பீடு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை தயார் செய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களை இலக்காகக் கொண்டு 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் வரவு செலவுத்திட்டங்களை தயார் செய்துகொள்ளத் தேவையான வழிகாட்டல்களை தயார் செய்வதன் மூலம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வினைத்திறனை மேம்படுத்துவதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு செயன்முறைசார் உபாயமுறையிலான திட்டங்களை தயார் செய்தல் மற்றும் வரவு செலவுத்திட்டங்களை தயார் செய்வது நோக்காகக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பாடநெறியில் பயிலுனர்கள் 18 பேர் பங்கேற்றார்கள் என்பதுடன் பாடநெறி வருமானம் ரூபா 120,600.00 ஆகும்.

1.7.4.10 கூட்டுறவு அமைப்புக்கள் தொடர்பான வரிக் கொள்கைகள் மற்றும் வரி கணிப்பீடு செய்வது பற்றிய செயன்முறை நடைமுறைகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

இன்றைய பொருளாதார கொள்கைக்குள் அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் ஒரு உபாயமுறையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள வரிக் கொள்கையில் இதுவரை கூட்டுறவு தொழிலுக்கு வழங்கப்பட்டிருந்த வரிச் சலுகை நீக்கப்பட்டுள்ளது. இப்புதிய வரிக் கொள்கைக்கு அமைய அறிமுகம் செய்யப்பட்டுள்ள வரிகள் தொடர்பில் ஏற்புடையதாகின்ற வரி வகைகள் மற்றும் பதிவு செய்யும் முறை, வருமான வரி கணிப்பீடு மற்றும் கணக்குப் பதிவு, பெறுமதி சேர் வரி மற்றும் அறிக்கைகளை தயார் செய்வதும், கணக்குப் பதிவும், சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு வரி, முத்திரை வரி போன்ற விடயப்பரப்புக்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டுவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. இப்பாடநெறியில் பயிலுனர்கள் 17 பேர் கலந்துகொண்டார்கள் என்பதுடன், பாடநெறி வருமானம் ரூப 170,000.00 ஆகும்.

1.7.4.11 அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிச் சோவை கூட்டுறவுச் சங்கங்களில் நிதிக் கூற்றுக்களை தயார் செய்வது பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

கூட்டுறவு சங்கங்களில் கணக்கீட்டுச் செயன்முறையை பலப்படுத்துவதற்காக நிதி அறிக்கைகளின் தரமான தன்மையை அபிவிருத்தி செய்துகொள்வதற்கு நிதி

அறிக்கைகளின் ஏற்புடையதன்மையை பாதுகாத்துக் கொள்வதற்கும் இலங்கையின் கணக்கீட்டு நடைமுறைகளை வழிப்படுத்தும் பிரதான தொழில்வாண்மை நிறுவனமான இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவகம் அறிமுகம் செய்துள்ள நிதி அறிக்கையிடல் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமங்களில் உள்ளடங்கும் வழிகாட்டல்களை கூட்டுறவுச் சங்கங்களின் கணக்கீட்டுப் பணிகளுக்கும் நடைமுறையில் பயன்படுத்திக் கொள்ளும் முறை பற்றி விழிப்புணர்வூட்டுவதற்காக இலங்கை கணக்கீட்டு நியமங்களின் செயன்முறைப் பயன்பாடு பற்றிய இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டுள்ளது. இப்பாடநெறியில் பயிலுனர்கள் 62 பேர் கலந்துகொண்டுள்ளார்கள் என்பதுடன், பாடநெறி வருமானம் ரூபா 375,000.00 ஆகும்.

1.7.4.12 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிராமிய வங்கி உள்ளக் கணக்காய்வு பற்றிய செயன்முறை செயலமர்வு

கூட்டுறவுச் சங்கங்களின் கிராமிய வங்கித் துறையிலுள்ள உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் கணக்காய்வு உதவியாளர்களுக்கு கடமைசார் விடயப்பரப்புக்கு உரித்தான செயற்பணியை நிறைவேற்றுவதற்கும், அதன் மூலம் உள்ளகக் கணக்காய்வை பலப்படுத்தல், கிராமிய வங்கிகளின் உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் கணக்காய்வு உதவியாளர்களுக்கு விடய ரீதியான செயன்முறை அறிவைப் பெற்றுக் கொடுத்தல், கிராமிய வங்கிகளில் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரிவுகளை பலப்படுத்துவதை நோக்காகக் கொண்டு இந்த செயலமர்வு நடாத்தப்பட்டது. இப்பாடநெறியில் பயிலுனர்கள் 43 பேர் கலந்துகொண்டார்கள் என்பதுடன் பாடநெறி வருமானம் ரூபா 146,200.00 ஆகும்.

1.7.4.13 கூட்டுறவு நிதி ஒழுங்குவிதிகள் கோவை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

மத்திய அரசின் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு வங்கி ஒழுங்குறுத்தல் தேசிய பிரிவினால் சகல பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிலும் நிதிக் கொடுக்கல் வாங்கல்களை முறையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் பேணிவருவதற்கும் நல்லமுறையில் அறிக்கையிடும் பணிக்குமான வழிகாட்டல்களை அறிமுகம் செய்து கூட்டுறவு நிதி ஒழுங்குவிதிகள் கோவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி ஒழுங்குவிதிக் கோவையை பயன்படுத்திக் கொள்வதற்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் வ/பி/2021/05 ஆம் இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஒன்லையின் முறையில் நடாத்தப்பட்ட இப்பாடநெறியில் பயிலுனர்கள் 175 பேர் பங்கேற்றார்கள் என்பதுடன், பாடநெறி வருமானம் ரூபா 251,000.00 ஆகும்.

1.7.4.14 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் செயன்முறை கணக்கீட்டுப் பயிற்சிச் செயலமர்வு

பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களில் கணக்கீட்டுச் செயன்முறை பற்றி கணக்குப் பிரிவுகளின் ஊழியர்களின் செயன்முறை அறிவு, திறமை, நடைமுறைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் இப்பயிற்சி செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டது. கூட்டுறவு சங்கங்களின் செயன்முறை கணக்கீட்டுச் செயற்பாட்டின் கோட்பாடுசார் மற்றும் செயன்முறை பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளத் தேவையான கணக்குப் பிரிவின் பதவியணி உறுப்பினர்களை இலக்காகக் கொண்டு நடாத்தப்பட்ட இப்பயிற்சி செயலமர்வில் பயிலுனர்கள் 63 பேர் பங்கேற்றார்கள் என்பதுடன், பாடநெறி வருமானம் ரூபா 613,250.00 ஆகும்.

1.7.4.15 கருத்திட்ட முகாமைத்துவம் பற்றிய பயிற்சிச் செயலமர்வு

எந்தவொரு பொருளாதாரக் கட்டமைப்பிலும் அபிவிருத்தி அடித்தளத்தின் ஒரு கட்டமாக அபிவிருத்திக் கருத்திட்டங்கள் கருதப்படுகின்றன. இது கூட்டுறவு இயக்கத்தின் முன்னேற்றத்திற்காக நடவடிக்கை மேற்கொள்ளும் கூட்டுறவு

தொழில்முயற்சிகளின் செயற்பாட்டை தீவிரப்படுத்துவதற்காக வெற்றிகரமாக பயன்படுத்தப்படுகின்றது. கூட்டுறவு இயக்கத்தில் உறுப்பினர்களான மக்கள் மற்றும் மக்களின் வாழ்க்கை மற்றும் நிறுவனம்சார் அபிவிருத்திக் கருத்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி கருத்திட்ட முகாமைத்துவம் என்பது எந்தவொரு நிறுவனத்திலும் வெற்றிகரமான பெறுபேறுகளை உறுதி செய்வதற்கான தீர்க்கமான திறமையாகும். இந்த செயலமர்வின் மூலம் கருத்திட்ட முகாமைத்துவ கோட்பாடுகள், கருவிகள் மற்றும் நுட்ப முறைகள் பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக் கொடுப்பது நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த செயலமர்வில் பயிலுனர்கள் 13 பேர் கலந்துகொண்டார்கள் என்பதுடன் பாடநெறி வருமானம் ரூபா 87,100.00 ஆகும்.

1.7.4.16 சனச சங்க அலுவலர் குழுவின் அங்கத்தவர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு

இலங்கையின் சனச இயக்கத்தின் முன்னேற்றத்திற்காகவும், சங்கத்தின் நிலைபேறான நிலைத்திருத்தலுக்காகவும், அதில் தீர்மானங்களை மேற்கொள்ளும் பிரதான தரப்பினர்களான சனச சங்க கௌரவ தவிசாளர்கள் உள்ளிட்ட கௌரவ அலுவலர் குழு உறுப்பினர்களுக்கு துணை விதிகளுக்கு அமைய தமது கடமை நடவடிக்கைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அறிவு, திறமை, மனப்பாங்கு, நடவடிக்கைமுறைகளை அபிவிருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு இப்பாடநெறி நடாத்தப்பட்டது. இச்செயலமர்வில் பயிலுனர்கள் 52 பேர் கலந்துகொண்டார்கள் என்பதுடன், பாடநெறி வருமானம் 251,169.00 ஆகும்.

1.7.4.17 நிதிச் சேவைகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூட்டுறவுச் சேவைகள் பணிகள் பற்றிய விதிகள் கோவையின் ஏற்பாடுகளை அறிமுகம் செய்யும் பயிற்சிச் செயலமர்வு

கூட்டுறவுச் சங்க அலுவலர்களுக்கு கூட்டுறவு நிதிச் சேவைகள் சங்கங்களின் நிதிசார் இடையீட்டுச் செயற்பாடு, நிதிசார் இடையீட்டுச் செயற்பாட்டில் நிதி சேகரிக்கும் பணி, நிதி செலவினமயப்படுத்தல் மற்றும் கொடுக்கல் வாங்கல் சேவைகளை ஆக்குதல், நிதிசார் இடையீட்டுச் செயன்முறையில் கடன் உருவாக்கம் மற்றும் நிதிச் சேவைகள் உருவாக்கம், கூட்டுறவு நிதிச் சேவை சங்கங்களில் சிறந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறையியல்களை இனங்காணல், நிதிச் சேவைகள் கூட்டுறவுச் சங்கங்கள் தற்காலத்தில் எதிர்கொண்டுள்ள சிக்கல்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள், உத்தேச தீர்வுகளை இனங்காணல் மற்றும் கடன் அறவீடு பற்றிய சிக்கல்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகளை இனங்காண்பதை நோக்காகக் கொண்டு நடாத்தப்பட்ட இச்செயலமர்வில் பயிலுனர்கள் 23 பேர் கலந்துகொண்டார்கள் என்பதுடன், பாடநெறி வருமானம் 154,100.00 ஆகும்.

1.7.4.18 களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் பொருட் கணிப்பீடு பற்றிய ஒரு நாள் பயிற்சிச் செயலமர்வு

இன்று இடம்பெறுகின்ற வியாபாரச் சூழலில் வினைத்திறன்மிக்க களஞ்சிய முகாமைத்துவம் வியாபாரத்தின் வெற்றியை தீர்மானிப்பதில் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பொருட்களின் சரியான தன்மை மற்றும் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தல், தேவையான நேரத்திற்கு விநியோகித்தல், இருப்புக் கட்டுப்பாடு, உற்பத்தி, விநியோகம், நுகர்வோரின் மனப்பாங்குக்கு ஏற்றவகையில் செயற்படல் போன்ற நடவடிக்கைகளுக்கு தொழில்சார் அறிவு அவசியமாகின்றது. பொருட் கணிப்பீடானது, வியாபார நிறுவனங்களில் நியாயமாகவும், நம்பகத்தன்மையுடனும் நிதி அறிக்கைகளை பேணிவருவதற்கு, இருப்புக் கட்டுப்பாடு, தகவல்களை சரியாக அறிக்கையிடுவதற்கு அத்தியாவசியமான செயன்முறையாகும். சரியான மற்றும் கவனம்மிக்க பொருட் கணிப்பீடு மூலம் வியாபாரமொன்றின் வினைத்திறன், மோசடிகளை குறைத்தல்,

தெரிவு செய்யப்பட்ட முகாமைத்துவ தீர்மானங்கள் பற்றிய நம்பிக்கையை வளர்க்கும். இப்பாடநெறிகள், பயிலுனர்களுக்கு பொருட் கணிப்பீடு பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள், அமுல்படுத்தும் முறையியல்கள், சட்டரீதியான கொள்கைகள் மற்றும் நவீன கட்டமைப்பு பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும். ஒன்லையின் மூலம் நடாத்தப்பட்ட இப்பயிற்சிச் செயலமர்வில் பயிலுனர்கள் 46 பேர் கலந்துகொண்டார்கள் என்பதுடன், பாடநெறி வருமானம் 121,000.00 ஆகும்.

1.7.4.19 இடர் மற்றும் அபாய முகாமைத்துவம்

இடர் மற்றும் அபாயக் கட்டுப்பாடு, கூட்டுறவு அமைப்புக்களின் நீண்டகால நிலைபேறான தன்மை மற்றும் சமூக பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு ஆரம்ப மட்டத்திலேயே கவனத்தில் கொள்ள வேண்டிய துறையாகும். தன்னியக்கக் கட்டுப்பாடு, சமுதாய அடிப்படையிலான முறைமையைக் கொண்ட கூட்டுறவு அமைப்புக்களில், உடன்படிக்கைகள், பொருட்கள், நிதி, மனிதவளம் மற்றும் தகவல்களைப் பாதுகாப்பதற்கு முறையான இடர் மற்றும் அபாய முகாமைத்துவம் அத்தியாவசியமானதாகும்.

இப்பாடநெறி கூட்டுறவுத் துறையில் நடவடிக்கை மேற்கொள்ளும் ஆட்களுக்கு மற்றும் நிறுவனப் பிரதிநிதிகளுக்கு அபாயங்களை இனங்காணல், பகுப்பாய்வு செய்தல், பொருத்தமான தீர்வுகளை திட்டமிடுவது பற்றிய விசேட அறிவையும், ஆற்றல்களையும் பெற்றுக் கொடுப்பதை நோக்காகக் கொண்டுள்ளது. இச்செயலமர்வில் பயிலுனர்கள் 30 பேர் கலந்துகொண்டார்கள் என்பதுடன், பாடநெறி வருமானம் 201,000.00 ஆகும்.

1.7.4.20 கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமை கணக்காய்வு

கூட்டுறவுச் சங்கங்களில் கணக்கீட்டு முறைமையை அமுல்படுத்தும் போது அவதானிப்புச் செய்யப்படுகின்ற பலவீனங்களை இனங்கண்டு மேற்படி கணக்கீட்டு முறைமைக்கு தகவல்களை தரவேற்றம் செய்தல், அத்தகவல்களை மையமாகாகக் கொண்டு நிதி அறிக்கைகளை தயார் செய்தல் மற்றும் கணக்கீட்டு முறைமையை கணக்காய்வு செய்யும் செயன்முறையை இனங்காணல் மற்றும் புரிந்துகொள்ளத் அத்தியாவசியமான விடயமாகும். குறிப்பாக மேற்படி கணக்காய்வில் வெளிப்படுத்தப்படுகின்ற பலவீனங்களை முகாமைத்துவத்துக்கு தொடர்பாடல் செய்யும் முறை பற்றி சங்க அலுவலர்கள் திணைக்கள அலுவலர்களை விழிப்புணர்வூட்டுவதை நோக்காகக் கொண்டு இப்பாடநெறி திட்டமிடப்பட்டது. இச்செயலமர்வில் பயிலுனர்கள் 24 பேர் கலந்துகொண்டார்கள் என்பதுடன், பாடநெறி வருமானம் 160,800.00 ஆகும்.

1.7.4.21 இணையத்தள அபிவிருத்தி பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

இந்த இணையத்தள அபிவிருத்தி பற்றிய உயர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டிருப்பது அதனைக் கற்றுக் கொள்ளும் பயிலுனர்களுக்கு செயன்முறை பயிற்சி மற்றும் அறிவை வளர்ப்பதை நோக்காகக் கொண்டாகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் தொடர்ச்சியாக புதுப்பிக்கப்படுகின்ற தொழில்நுட்ப முறை, வியாபாரத் துறையின் வெற்றிகரமான பயிற்சியுடன் இற்றைப்படுத்தப்பட்ட மற்றும் செயன்முறை பயிற்சி மூலம் தற்காலத்தில் நிலவும் சவால்களுக்கு இணையத்தளத்தை அபிவிருத்தியை மேற்கொள்வதும் இந்த நிகழ்ச்சித்திட்டம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

1.8 நிறுவகத்தின் எதிர்பார்ப்புக்களும், சவால்களும்

1.8.1 எதிர்பார்ப்புக்கள்

2001 இன் 01 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்துக்கமைய தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் செயற்பணிகளை நிலவும் சவால்களுக்கு மத்தியில் நிறைவேற்றிக் கொள்வதற்கு பின்வரும் எதிர்பார்ப்புக்களை அடைந்துகொள்ளல் வேண்டும்.

I. பாடநெறிகளின் தரத்தை மேம்படுத்திக் கொண்டு பட்டமளிக்கும் நிறுவனமொன்றாக மாற்றிக்கொள்ளல்.

பேணிவரப்படுகின்ற டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக ளுடுஞகு மட்டம் வரை தரமுயர்த்துவதற்கு மற்றும் உயர் கல்வித்துறையில் அங்கீரிக்கப்பட்ட பட்டமளிப்பு நிறுவனமொற்காக மாறுதல்.

II. சுயநிதியை உழைத்துக் கொள்ளும் நிறுவனமாக மாறுதல்

திறைசேரியினால் ஒதுக்கப்படுகின்ற ஏற்பாடுகளை படிப்படியாகக் குறைத்துக் கொண்டு நிறுவனத்தின் நிதி உருவாக்க உபாயமுறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை பன்முகப்படுத்துவதன் மூலம் மற்றும் அளவை அதிகரித்துக் கொள்வதன் மூலம் அதிகரித்துக் கொண்டு வருமானத்தை மேம்படுத்திக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல்.

III. ஆராய்ச்சி நடவடிக்கைகளை கூட்டுறவுத்துறையில் மேற்கொள்ளச் செய்து அதன் சிபாரிசுகளை கூட்டுறவுத் துறையின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளல்.

கூட்டுறவுத்துறை தற்போது எதிர்கொண்டுள்ள சிக்கல்களை இலக்காகக் கொண்டு கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களைப் பயன்படுத்தி ஆராய்ச்சி நடவடிக்கைகளை வழிநடாத்தல். தொழில்முயற்சிசார் கற்கைகளில் ஈடுபட்டுள்ள பட்டங்களை எதிர்பார்த்துள்ளவர்களுக்கு ஆராய்ச்சிகளை கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மேற்கொள்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து இலகுபடுத்துபவராக தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் செயற்பட்டுள்ளது.

IV. பயிற்றப்பட்ட விகிதத்தை வளர்த்துக் கொள்ளல்.

வருடாந்தம் பயிற்சிகளில் ஈடுபடுகின்ற கூட்டுறவுத் துறையினரின் எண்ணிக்கை ஒப்பீட்டு ரீதியாக மிகவும் குறைவானதாக உள்ளது. இதற்குப் போதியளவு நிதி ஏற்பாடுகள் திறைசேரியிடமிருந்து கிடைப்பதில்லை என்பதுடன், அதற்கென ஈடுபடுத்த நிறுவகம் உழைத்துக் கொள்ளும் தொகைகளும் போதியதாக இல்லை. குறைந்தபட்ச செலவினை செய்து மற்றும் குறைந்தபட்ச செலவில் மேற்கொள்ளக்கூடிய தொலைக் கல்வி முறையை விளைதிறன்மிக்கவாறு பயன்படுத்திக் கொண்டு பயிற்றப்பட்ட விகிதத்தை வளர்த்துக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

V. பயிலுனர்களின் மென்திறன்களை வளர்த்துக் கொள்ளல்.

கூட்டுறவுத் தொழில்முயற்சியுடன் சம்பந்தப்பட்ட கோட்பாடுசார் மற்றும் செயன்முறை அறிவு பெற்றுக் கொடுக்கப்படுவதுடன், அவர்களின் ஆளுமை விருத்திக்கான மென் திறன்களை வளர்த்துக் கொள்ளக்கூடிய வகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பன்முகப்படுத்தலை ஏற்படுத்தல்.

VI. கூட்டுறவு சங்கங்கள் பற்றிய விரிவான தரவு முறைமை

இலங்கையில் கூட்டுறவுத் துறையின் அபிவிருத்திக்கு மிக அத்தியாவசியமான காரணி என்ற வகையில், கூட்டுறவுச் சங்கங்களில் சரியான தரவுகளை பேணிவருவதன் மூலம் நிறுவனம் பற்றிய தகவல்கள், அறிக்கைகள், புள்ளிவிபரங்களின் பகுப்பாய்வு உட்பட ஆராய்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதற்கும் கூட்டுறவு அறிவை மேம்படுத்துவதன் மூலம் மனிதவளத்தை அறிவு மற்றும் திறமைகளின் மூலம் மேம்படுத்துவதற்கும் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய டிஜிரல் தரவு முறைமையை தாபித்துப் பேணிவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.

நிறுவனம்சார் நிருவாகம் மற்றும் நிருவாக நடவடிக்கைகளின் முன்னேற்றம்

2 நிறுவகம்சார் நிருவாகம் மற்றும் நிருவாக நடவடிக்கைகளின் முன்னேற்றம்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் பிரதான நிருவாக அலகாக நிறுவகத்தின் முகாமைத்துவ சபை காணப்படுகின்றது. மேலும் கற்கை நடவடிக்கைகள் தொடர்பில் நிறுவகத்தின் கற்கை சபை செயற்பட்டு வருவதுடன், உள்ளக கணக்காய்வுக் குழு நிறுவகத்தின் நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்கின்றது.

2.1 முகாமைத்துவ சபை மற்றும் அந்நடவடிக்கைகளின் முன்னேற்றம்

முகாமைத்துவ சபையானது நிறுவகத்தின் நடவடிக்கைகளை நிருவகித்தல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் கட்டுப்படுத்துவதை மேற்கொள்வதுடன், நிறுவகம் தாபிக்கப்பட்டுள்ள சட்டத்தினால் நிறுவகத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் மற்றும் பணிகள் அமுல்படுத்தப்படுகின்றன. நிறுவகத்தின் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் வருடாந்த வரவு செலவுத்திட்டத்தை அங்கீகரிப்பது முகாமைத்துவ சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

2.1.1 முகாமைத்துவ சபையின் ஒழுங்கமைப்பு

நிறுவகத்தின் முகமைத்துவ சபையானது பின்வரும் ஆட்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

(அ) பதவி வழியாக நியமனம் பெறும் உறுப்பினர்கள்

i கூட்டுறவு அபிவிருத்தி விடயப்பொறுப்பு அமைச்சரின் அமைச்சுச் செயலாளராக, சமகாலத்தில் பதவி வகிக்கின்ற அல்லது அவரினால் பெயரிடப்படுகின்ற ஆளொருவர்,

ii. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்,

iii. இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் தவிசாளர்.

iv. இலங்கை கூட்டுறவு முகாமைத்துவ நிறுவகத்தின் தவிசாளர்; மற்றும் (இந்த நிறுவகம் தற்போது இயங்குவதில்லை.)

v. 16 ஆம் பிரிவின் கீழ் நியமனம் செய்யப்பட்டுள்ள, நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்.

(ஆ) அமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர்கள்

i. கூட்டுறவுத் துறையில் பரந்த அனுபவமும், முகாமைத்துவம் பற்றிய அனுபவமும் உள்ள ஆட்களிலிருந்து கூட்டுறவு விடயப்பொறுப்பு அமைச்சரினால் பெயரிடப்படுகின்ற ஆட்கள் மூவர்.

ii. உயர் கல்வி விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் பெயரிடப்படுகின்ற உயர் கல்வி அமைச்சின் பிரதிநிதி ஒருவர்; மற்றும்

iii. நிதி விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் பெயரிடப்படுகின்ற உயர் திறைசேரியின் பிரதிநிதி ஒருவர்.

முகாமைத்துவ சபைக்கு நியமனம் செய்யப்படுகின்ற ஆட்களில் ஒருவர் முகாமைத்துவ சபையின் தவிசாளராக அமைச்சரினால் நியமனம் செய்யப்படுவார்.

2.1.2 2024.12.31 ஆம் திகதியில் முகாமைத்துவ சபையின் உறுப்பினர்களின் விபரம்

தொடர் இல.	பெயர்	பதவி	நியமனம் செய்த உறுப்பினரா அல்லது பதவி வழியாகவா என்பது
01	திரு டபிள்யு.யூ. ஹேரத்	தவிசாளர், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்	நியமனம் செய்த உறுப்பினர்
02	திருமதி வீ.பீ.கே. பிலபிட்டிய	பணிப்பாளர் நாயகம், (பதில்) தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் (பதவி வழியாக)	பதவி வழியாக
03	திருமதி சம்பிகா பத்திரண	மேலதிக பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு	பதவி வழியாக
04	செல்வி எச்.ஏ. ஹப்புஆரச்சி	கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்கப் பதிவாளர், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் (மத்திய அரசு)	பதவி வழியாக
05	திரு ஜி.டி.எஸ். வீரசிறி	தவிசாளர், தேசிய கூட்டுறவுச் சபை	பதவி வழியாக
06	திரு பிரேமசிறி விதான பத்திரண	முகாமைத்துவ சபை உறுப்பினர்	நியமனம் செய்த உறுப்பினர்
07	திரு எச்.எம். நிமல் ஹேரத் பண்டா	முகாமைத்துவ சபை உறுப்பினர்	நியமனம் செய்த உறுப்பினர்

2.1.3 2024 ஆம் ஆண்டின் முகாமைத்துவ சபையின் நடவடிக்கைகளின் முன்னேற்றம்

2024 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சபையின் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் தீர்மானங்களை மேற்கொண்டமை பற்றிய முன்னேற்றம் பின்வருமாறாகும்.

ஆண்டு	நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை	முகாமைத்துவ சபை பத்திரங்களின் எண்ணிக்கை (பிரதான செயலாற்றுகை சுட்டி)	வழங்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் ஆலோசனைகளின் எண்ணிக்கை (பிரதான செயலாற்றுகை சுட்டி)
2022	08	183	224
2023	11	213	259
2024	09	188	229

2.2. 2024 ஆம் ஆண்டுக்கான கற்கை சபை மற்றும் அதன் நடவடிக்கைகளின் முன்னேற்றம்

முகாமைத்துவ சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கைசார் தீர்மானங்களுக்கு அமைய நிறுவகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்தல், பாடநெறிகள் மற்றும் பாடவிதான அபிவிருத்தி, பரீட்சைகளை நடாத்தல், மதிப்பீடு பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பிலான சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல், சான்றிதழ்களை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பது தொடர்பிலான நிபந்தனைகளை விதித்தல் போன்ற நடவடிக்கைகள் கற்கை சபையின் செயற்பணியாகும்.

2.2.1. கற்கை சபையின் ஒழுங்கமைப்பு

2001 இன் 01 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 12(1) இற்கு அமைய நிறுவகத்தின் கற்கைச் சபை, முகாமைத்துவ சபையினால் நியமனம் செய்யப்படுகின்ற பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கற்கை சபையின் ஒழுங்கமைப்பு பின்வருமாறாகும்.

i. கற்கை சபையின் தவிசாளராக இருக்க வேண்டிய, நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்,

ii. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக் கழக சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ள பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயரிடப்படுகின்ற பல்கலைக் கழக கல்விசார் பதவியணியின் பிரதிநிதியொருவர்,

iii. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அல்லது அவரின் பிரதிநிதி ஒருவர்,

iv. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் பெயரிடப்படுகின்ற பிரதிநிதி ஒருவர், மற்றும்

v. அமைச்சரின் விருப்பத்தின் பேரில், முகாமைத்துவம் தொடர்பிலான அனுபவமும், பயிற்சியும் பெற்றுள்ள கூட்டுறவுத்துறை அல்லது தனியார் துறையிலிருந்து தெரிவு செய்யப்படுகின்ற ஆளொருவர்.

2.2.2. 2024 ஆம் ஆண்டுக்கான கற்கை சபையின் பிரதிநிதிகள்

தொடர் இல.	பெயர்	பதவி	நியமனத்தின் தன்மை
1.	வீ.பீ.கே. பிலபிட்டிய	பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர், தே.கூ.அ.நி. பொல்கொல்ல	பதவி வழியாக
2.	பேராசிரியர் ஆர்.பீ.ஐ.ஆர். பிரசன்ன	பொருளியல் கற்கைப் பிரிவு, இலங்கை ரஜரட்ட பல்கலைக் கழகம்	பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் பெயரிடப்படுகின்ற பல்கலைக் கழக கல்விசார் பதவியணியின் பிரதிநிதி ஒருவர்.
3.	செல்வி ஏ.ஏ. ஆஷா ஹப்புஅரச்சி	கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்கப் பதிவாளர்	பதவி வழியாக
4.	திரு டபிள்யு.வீ.டி.எஸ்.எம். வரகாகொட	பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர்	பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் பிரதிநிதி

2.2.3. 2024 ஆம் ஆண்டின் கற்கை சபையின் நடவடிக்கைகளின் முன்னேற்றம்

திகதி	பங்கேற்பு	சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களின் எண்ணிக்கை	மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் ∴ ஆலோசனைகளின் எண்ணிக்கை
2024.09.06	04	11	11

2.3. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மற்றும் அதன் நடவடிக்கைகளின் முன்னேற்றம்

நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வாளரின் ஒருங்கிணைப்பின் கீழ் நிறுவகத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்பட்டு வருவதுடன், நிறுவகத்தின் கணக்காய்வு வினாக்கள், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு வினாக்களுக்கு அமைய சுட்டிக்காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் இக்குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்படும்.

2.3.1. கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் ஒழுங்கமைப்பு

I. முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் மூன்று பேர்
II. தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் ஒருவர்
III. நிறுவகம் உரித்தான அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்
IV. நிறுவகத்தின் உள்ளக கணக்காய்வாளர் - கூட்ட ஏற்பாட்டாளர்

2.3.2. 2024 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பிரதிநிதிகள்

தொடர் இல.	பெயர்	பதவி
01.	திரு எம்.ஆர்.ஜி.ஏ.பி. முத்துகுடே	மேலதிக பணிப்பாளர் நாயகம் அரச நிதிக் கொள்கைகள் திணைக்களம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
02.	திருமதி சம்பிகா பத்திரண	மேலதிக பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
03.	செல்வி ஏ.ஏ. ஆஷா ஹப்புஅரச்சி	கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்கப் பதிவாளர், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
04.	திரு ஆர்.எம்.பீ.எஸ். அபேரத்ன	பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) உயர் கல்விப் பிரிவு, கல்வி அமைச்சு
05.	திரு பிரேமசிறி விதான பத்திரண	முகாமைத்துவ சபை உறுப்பினர்
06.	திரு எச்.எம். நிமல் ஹேரத் பண்டா	முகாமைத்துவ சபை உறுப்பினர்
07.	திருமதி ஆர்.பீ.ரீ.டி. ராஜபக்ஷ	கணக்காய்வு அத்தியட்சகர் - தேசிய கணக்காய்வு அலுவலகம்
08.	திருமதி டபிள்யு.ஜி.ரீ.எஸ். பெர்ணாந்து	கணக்காய்வு அத்தியட்சகர் - தேசிய கணக்காய்வு அலுவலகம்
09.	திருமதி கே.டி.எம். இந்திராணி பிசோ மெனிகே	கணக்காய்வு அத்தியட்சகர் - தேசிய கணக்காய்வு அலுவலகம்
10.	திருமதி எஸ்.எம். ராஜபக்ஷ	பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு
11	செல்வி ஆர்.ஏ.ஏ.எச். பிரேமசந்திர	உள்ளகக் கணக்காய்வாளர், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்

2.3.3. 2024 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் நடவடிக்கைகளின் முன்னேற்றம்

திகதி	பங்கேற்பு	மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள்
2024.02.22	05	26
2024.08.23	05	15
2024.11.01	06	37
2025.01.10	05	48
மொத்தம்		126

2.3.4 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் முன்னேற்றம்

2024 இற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கு அமைய நிறுவனத்தின் தாபன மற்றும் நிருவாக, கற்கை, நிதி, விடுதி, அச்சு, பரீட்சை, நூலக, தகவல் தொழில்நுட்பம் போன்ற சகல துறைகளும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன், கணக்காய்வு வினாக்கள் மற்றும் பதில்களைப் பெற்றுக் கொடுப்பதன் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

தொடர் இலக்கம்	பிரிவு	வினாக்களின் எண்ணிக்கை (அறிக்கைகளின் எண்ணிக்கை)	விளக்கங்களின் எண்ணிக்கை	பதிலளித்தல்
01.	தாபன நிருவாகம் மற்றும் நிதிப் பிரிவு	03	14	பதில் அளிக்கப்பட்டுள்ளது
02.	கற்கை மற்றும் அபிவிருத்திப் பிரிவு, பரீட்சைகள் மற்றும் நூலகப்	06	23	
03.	விடுதிப் பிரிவு	03	12	
	மொத்தம்	12	49	

3.
2024 ஆம் ஆண்டுக்கான நிறுவகம்சார் முன்னேற்றம்

3. தாபன மற்றும் நிருவாகப் பிரிவின் முன்னேற்றம்

தாபன அலுவல்கள், பெறுகை அலுவல்கள், நிறுவன இணையத்தளத்தை இற்றைப்படுத்தும் பணிகள், பரீட்சை நடவடிக்கைகள், வாகன அலுவல்கள், மனிதவள அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் முகாமைத்துவ சபைக் கூட்டங்கள் போன்ற கடமைசார் நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவின் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

3.1.1 மனிதவள அபிவிருத்தி

அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை	71
2024.12.31 ஆம் திகதியில் இருந்தவாறான பதவியணி	38
2024.12.31 ஆம் திகதிக்கு வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கை	33
2024 ஆம் ஆண்டில் வெளிநாட்டு பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை 01*	
2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பதவியணிக் கூட்டங்களின் எண்ணிக்கை	03

*2023 ஆம் ஆண்டில் உதவி விரிவுரையாளர் ஒருவர் வெளிநாட்டுப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்பதுடன், மேற்படி அலுவலர் இதுவரை அப்பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

3.1.2 *பௌதீக அபிவிருத்தி மற்றும் கொள்முதல் நடவடிக்கைகள்*

	தொகை
சிறு கொள்முதல்கள்	3,139,112.16
திணைக்கள சார் கொள்முதல்கள்	16,328,247.32
	19,467,359.48

3.1.3 பரீட்சைகளை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல்

3.1.3.1 2024 ஆம் ஆண்டில் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதன் முன்னேற்றம்

பாடநெறி	மாணவர்களின் எண்ணிக்கை (மூீஐ)				
	தோற்றிய	சித்தி	குறைச் சித்தி	சித்தி பெறாத	வேறு
1. ஆங்கில சான்றிதழ் பாடநெறி 2023	17	17	-	-	-
2. அலுவலகங்களை தன்னியக்கமயப்படுத்துவது பற்றிய சான்றிதழ் பாடநெறி	16	10	-	06	-
3. வியாபார முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி 2023	16	14	02	-	-
4. கணக்காய்வு டிப்ளோமா பாடநெறி 2023	37	16	09	03	09
5. கணக்கியல் டிப்ளோமா பாடநெறி 2023	34	23	08	01	02
6. மனித வள முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி 2023	24	16	07	01	-
7. வங்கி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி 2023	31	18	04	-	09
மொத்தம்	175	114	30	11	20

3.1.3.2 மீட்டல் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடல்

பாடநெறி	மாணவர்களின் எண்ணிக்கை				
	தோற்றிய	சித்தி	குறைச் சித்தி	சித்தி பெறாத	வேறு
கூட்டுறவு அபிவிருத்தி டிப்ளோமா பாடநெறி - 2022/2023	02	02	-	-	-
கணக்காய்வு டிப்ளோமா -2021	02	01	01	-	-

3.1.3.3 2022 - 2024 இல் பரீட்சை நடாத்தியதன் முன்னேற்றம்

	2022	2023	2024
நடாத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை	171	121	76
பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை	5348	3293	2141

3.2 கற்கைப் பிரிவின் முன்னேற்றம்

பாடநெறிகளை திட்டமிடல் மற்றும் நடாத்தல், ஆராய்ச்சி நடவடிக்கைகள், ஆலோசனை சேவை நடவடிக்கைகள், நூலக நடவடிக்கைகள், மாணவர்களின் நடவடிக்கைகள் போன்ற கடமைசார் நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

கற்கைப் பிரிவானது, பணிப்பாளர் (கற்கை மற்றும் அபிவிருத்தி) இன் கீழ் இயங்கி வருவதுடன் இது கல்விசார் மற்றும் கல்விசாரா பதவிகளை உள்ளடக்கியது. அதற்கமைய நிருவாக அலுவலர் (மாணவர் அலுவல்கள்), விரிவுரையாளர்கள் 10 பேர் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் 02 பேர் உட்பட 28 பேரைக் கொண்ட பதவியணியினரைக் கொண்டதாக இருக்க வேண்டுமாயினும், 2024 ஆம் ஆண்டில் சிரேஷ்ட விரிவுரையாளர், உதவி விரிவுரையாளர்கள் (08), நிருவாக அலுவலர் (மாணவர் அலுவல்கள்), சிரேஷ்ட நூலகர், உதவி நூலகர், உதவி ஆராய்ச்சியாளர் ஒருவர், கணினிப் போதனாசிரிகர்கள் மூன்று பேர், முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் மற்றும் அபிவிருத்தி அலுவலர் ஒருவர் என்ற வகையில் மாத்திரம் இயங்கிவந்தது.

3.2.1 பாடநெறிகளை நடாத்துவதன் முன்னேற்றம்

2024 ஆம் ஆண்டில் நிறுவகத்தினால் நடாத்தப்பட்டுள்ள பாடநெறிகளின் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

3.2.1.1 பாடநெறிகளின் முன்னேற்றம் (03 மாதங்களுக்கு மேற்பட்டவை)

2024 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகள்

தொடர் இல.	பாடநெறியின் பெயர்	நடாத்தப்பட்ட தடவைகள்	பங்கேற்றோர்	பாடநெறி வருமானம் ரூ.
டிப்ளோமா பாடநெற				
1.	வியாபார முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி 2024	01	34	1,113,500.00
2.	கணக்காய்வு டிப்ளோமா பாடநெறி 2024	01	46	1,506,500.00
3.	வங்கி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி 2024	01	32	1,048,000.00
4.	மனிதவள முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா பாடநெறி 2024	01	11	360,250.00

5.	கணக்கீட்டு டிப்ளோமா பாடநெறி 2024	01	25	818,750.00
6.	தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி 2024	01	17	2,062,500.00
	சான்றிதழ் பாடநெறி			
7.	கணினி செயலி பற்றிய சான்றிதழ் பாடநெறி	01	04	1,191,150.00
8.	கணினி செயலி உதவி பற்றிய சான்றிதழ் பாடநெறி	01	29	
9.	ஆங்கில சான்றிதழ் பாடநெறி	01	16	256,000.00
	மொத்தம்	**09**	**223**	**8,356,650.00**

2023 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டு வரை நடாத்தப்பட்ட பாடநெறிகள்

தொடர் இல.	பாடநெறியின் பெயர்	பங்கேற்றோர்	நிதியாக கிடைத்த மொத்த பாடநெறி வருமானம் ரூ.
1.	கணக்காய்வு டிப்ளோமா பாடநெறி 2023/2024	31	775,000.00
2.	கணக்கீட்டு டிப்ளோமா பாடநெறி 2023/2024	32	800,000.00
3.	வங்கி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி 2023/2024	26	650,000.00
4.	வியாபார முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி 2023/2024	45	1,125,000.00
5.	மனிதவள முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா பாடநெறி 2023/2024	24	600,000.00
6.	வங்கி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி – குளியாப்பிட்டி (தொலை)2023-2024	37	1,239,500.00
7.	நுன்நிதி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி – மாத்தறை (தொலை) 2023-2024	100	2,500,000.00
8.	கூட்டுறவு அபிவிருத்தி டிப்ளோமா பாடநெறி 2023-2024	67	1,173,840.00
	மொத்தம்	**362**	**8,863,340.00**

3.2.1.2 குறுங்கால பாடநெறிகளை நடாத்துவதன் முன்னேற்றம்

தொடர் இல.	பாடநெறியின் பெயர்	நடாத்தப்பட்ட தடவைகள்	பங்கேற்றோர்	பாடநெறி வருமானம் ரூ.
01	சனச சங்கங்களுக்கான கணக்கீடு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (மேல், வடமேல் மாகாணம்)	01	39	168,550.00
02	அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கூட்டுறவுச் சங்கங்களில் நிதிக் கூற்றுக்களை தயார் செய்தல்	01	62	375,000.00
03	நிதிச் சேவைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூட்டுறவுச் சேவை பணிகள் பற்றிய விதிகளை உள்ளடக்கிய கோவையின் ஏற்பாடுகளை அறிமுகம் செய்தல்	01	23	154,100.00
04	செயலாளர் நடவடிக்கைமுறை பற்றிய இரண்டு நாள் பயிற்சி செயலமர்வு	01	26	174,200.00
05	கிராமிய வங்கி கடன் முகாமைத்துவம் பற்றிய பயிற்சிச் செயலமர்வு	01	53	355,100.00
06	நிதிச் சேவைகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முதலீடு மற்றும் கடன் கொள்கைகளை அறிமுகம் செய்தல்	01	22	147,400.00
07	சட்டப் பிரதிநிதிகளுக்கான பயிற்சிச் செயலமர்வு	01	20	134,000.00
08	கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமைக் கணக்காய்வு பற்றிய இரண்டு நாள் செயலமர்வு	01	24	160,800.00
09	கூட்டுறவு கிராமிய வங்கி அடகு முகாமைத்துவம் பற்றிய பயிற்சி செயலமர்வு	01	21	140,700.00
10	கருத்திட்ட முகாமைத்துவம் பற்றிய இரண்டு நாள் செயலமர்வு	01	13	87,100.00
11	வரியீட்டல் பற்றிய இரண்டு நாள் பயிற்சிச் செயலமர்வு	01	90	587,950.00
12	கிராமிய வங்கி உள்ளக கணக்காய்வுப் பயிற்சிச் செயலமர்வு (ஒன்லையின்)	01	46	121,000.00
13	எம்எஸ் எக்செல் குறுங்கால பயிற்சிச் செயலமர்வு (ஒன்லையின்)	01	16	48,000.00
14	கிராமிய வங்கிகளில் உள்ளகக் கணக்காய்வு பற்றிய பயிற்சிச் செயலமர்வு	01	39	261,300.00

15	வரியீட்டல் பற்றிய இரண்டு நாள் செயலாம்வு ஐஐ	01	55	358200.00
16	பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கிராமிய வங்கி உள்ளகக் கணக்காய்வு பற்றிய செயன்முறை செயலமர்வு	01	43	146,200.00
17	தொழில்வல்லுனர்களுக்கான உயர் கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்பு பற்றிய பாடநெறி	01	18	155,700.00
18	அபாயம் மற்றும் இடர் முகாமைத்துவம்	01	30	201,000.00
19	பலநோக்கக் கூட்டுறவுச் சங்க உள்ளகக் கணக்காய்வு பற்றிய செயன்முறை செயலமர்வு	01	26	130,000.00
20	கூட்டுறவுச் சங்கங்களின் வரவு செலவுத்திட்ட மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி திட்டங்களை தயார் செய்வது பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	01	18	120,600.00
21	கூட்டுறவு நிதிப் ஒழுங்குவிதிகள் கோவை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (ஒன்லையின்)	01	175	251,000.00
22	வரியீட்டல் கொள்கைகள் மற்றும் வரிக் கணிப்பீடு (அரச மற்றும் தனியார் துறை அலுவலர்களுக்கு)	01	17	170,000.00
23	இணையத்தள அபிவிருத்தி பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	01	22	94,250.00
24	செயன்முறைக் கணக்கீடு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	01	63	613250.00
25	செயற்குழு உறுப்பினர் பயிற்சி – வரை. காலி மாவட்ட சனச சங்கம்	01	52	251,169.52.00
	மொத்தம்	**25**	**2246**	**5,155,400.00**

3.2.1.3 வெளியாரின் கோரிக்கையின் பேரில் நடாத்தப்பட்ட பாடநெறிகளின் முன்னேற்றம்

தொடர் இல.	பாடநெறியின் பெயர்	நடாத்தப்பட்ட தடவைகள்	பங்கேற்றோர்	பாடநெறி வருமானம் ரூ.
01	மத்திய மாகாண நிதிச் சேவைகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அபிவிருத்தித் திட்டங்களை தயார் செய்யும் பயிற்சிச் செயலமர்வு	01	66	267,700.00
02	நெல் சந்தைப்படுத்தல் சபையின் அலுவலர்களின் திறன் அபிவிருத்திச் செயலமர்வு	01	157	1,227,150.00

03	பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கௌரவ பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர்களுக்கான பணி அபிவிருத்திப் பயிற்சிச் செயலமர்வு	01	37	233,100.00
04	பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்கியல் பயிற்சிச் செயலமர்வு	02	26	163,800.00
05	பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் உள்ளகக் கணக்காய்வு பற்றிய பயிற்சிச் செயலமர்வு	01	15	94,500.00
06	இலங்கை மகாவலி அதிகாரசபையின் மொரகஹகந்த வலய விவசாய அமைப்புக்களின் கணக்காய்வு அலுவலர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்	01	28	516,358.00
07	உளவியல் ஆலோசனை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் -மெணிக்ஹின்ன கிராமிய வங்கி	01	33	50,000.00
08	மனப்பாங்கு அபிவிருத்தி செயலமர்வு – வரை. ரிகில்லகஸ்கட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்	01	44	66,450.00
09	நேர்வரைசை கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் அபிவிருத்தி அலுவலர்களை பயிற்றுவித்தல்	01	28	214,914.00
10	செயற்குழு உறுப்பினர் பயிற்சி – வரை. கொஸ்கஹவெவ சனச சங்கம்	01	20	138,980.00
11	துணை விதிகளை திருத்தம் செய்வது பற்றிய பயிற்சி செயலமர்வு – கொஸ்கஹவெவ சனச சங்கம்	01	12	96,924.40
12	உறுப்பினர்களின் பணிகள் அபிவிருத்தக்கான பயிற்சி – வரை. தெய்யன்தர சனச சங்கம்	01	56	360,651.92
13	கணக்குகளின் மாதிரியமைப்பு பற்றிய செயலமர்வு – வரை. கட்டான ப.நோ.கூ.ச.	01	19	136,395.06
14	ஊழியர் மனப்பாங்கு அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - வரை. கொட்டபொல ப.நோ.கூ.ச.	01	38	236,897.32
15	பணிப்பாளர் சபை மற்றும் நிறைவேற்று குழு அலுவலர்களை பயிற்றுவித்தல் - வரை. மொரவக்கோரலே தேயிலை உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்களம்	01	45	307,749.60
16	இலங்கை மகவலி அதிகாரசபையின் வெலிகந்த வலயத்தின் விவசாய அமைப்புக்களின் கணக்காய்வு அலுவலர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்	01	25	149,203.78

17	மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள ப.நோ.கூ.சங்கங்களின் உள்ளக கணக்காய்வு பயிற்சி செயலமர்வு	01	47	132,150.00
18	மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பயிற்சி செயலமர்வு - 1	01	51	138,750.00
19	மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள ப.நோ.கூ.சங்கங்களின் உள்ளக கணக்காய்வு பயிற்சி செயலமர்வு - 2	01	53	132,150.00
20	மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பயிற்சி செயலமர்வு - 2		50	138,750.00
	மொத்தம்	**20**	**850**	**4,802,574.08**

3.2.2 கூட்டுறவுத் துறையின் ஆராய்ச்சிகளை மேம்படுத்தல்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் என்பது இலங்கையின் கூட்டுறவு இயக்கத்தின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற முன்னோடிப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவகமாகும். நாட்டினுள் கூட்டுறவுத் துறையின் அபிவிருத்தி மற்றும் பயிற்சியை மையமாகக் கொண்ட செயற்பணி இன்று இந்த நிறுவகத்தினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. மேலும், தரமான கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சியின் மூலம் கூட்டுறவுத் துறையில் அபிவிருத்திக்கு முனைப்புடன் பங்களிப்பு வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு நிலைபேறான, சனநாயக மற்றும் சமுதாயஞ்சார் கூட்டுறவு இயக்கங்களை போசிபப்பதற்குத் தேவையான அறிவு மற்றும் திறமைகளை கூட்டுறவு தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் தொழில் வல்லுனர்களுக்குப் பெற்றுக் கொடுத்து முனைப்புடன் தமது செயற்பணியை நிறைவேற்றி வருகின்றது.

3501-3512 அறவிடப்பட வேண்டிய பாடநெறிக் கட்டணங்கள் (அட்டவணை 5 A)	1,343,182	220,115
3504 அறவிடப்பட வேண்டிய வெளியாரின் நிகழ்ச்சித்திட்டக் கட்டணங்கள்	1,144,410	2,362,360
3513 அறவிடப்பட வேண்டிய அச்சுச் சேவைக் கட்டணம்	14,499	252,153
3514 வேறு சேவைகளை ஆற்றியமைக்காக கிடைக்க வேண்டிய கட்டணங்கள்	46,167	94,969
3402 ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்திய முற்பணம்		
3403 பாதுகாப்பு வைப்பு	78,000	
3515 முதலீட்டின் மீது கிடைக்க வேண்டிய வட்டி	1,320,915	
3518 அறவிடப்பட வேண்டிய விடுதிக் கட்டணம்		
3520 அறவிடப்பட வேண்டிய வீட்டு வாடகை	645,112	
3522 நூலகக் கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்டணம்	15,990	-
3523 வழங்குநர்களுக்கான முற்பணம்		-
3524 உணவுக்காக பதவியணியினரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை	14,200	6,770
3526 அறவிடப்பட வேண்டிய தண்டப்பணம்		3,437
3527 அறவிடப்பட வேண்டிய உற்சவ முற்பணம்		3,750
3532 பதவியணிக்கான முற்பணம்	8,000	16,824
3533 மேலதிக கொடுப்பனவு		-
3538 கிடைத்த வேண்டிய சம்பளம் மற்றும் ஊழியர் சேமலாப, நம்பிக்கை நிதியம்		90,148

3539 பெறுமதி சேர் வரி		-
3540 தடுத்துவைத்தல் வரி	33,026	77,448
3545 காசோலை மதிப்பிழந்ததன் அடிப்படையில் கட்டுப்பாட்டுக் கணக்கு	-	-
3544 இடர் கடன்		481
3547 முன் செலுத்திய காப்புறுத் தவணைப்பணம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	435,650	452,183
3548 அறவிடப்பட வேண்டிய பஸ் கட்டணங்கள்	-	-
3549 அறவிடப்பட வேண்டிய கட்டிட வாடகை	-	130,000
3551 தோட்டத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய வருமானம்	-	135
பெறத்தக்க தேர்தல் கடமை கட்டணம்	30,926	-
3553 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்புத் தொகை	212,134	252,188
பெறத்தக்க ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு கட்டணம்	-	-
3555 கூட்டுறவு நிதியிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை	-	-
4072 தயாசிறி பேக்கரி	-	-
3556 மாகாண கூட்டுறவு நிதியிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை	-	-
கூற்றுக் கணக்கு II – வர்த்தக கடன்பட்டோர் மற்றும் வேறு கிடைக்க வேண்டியவை	-	-
குறைக்க : ஐயக் கடன் ஒதுக்கம்	(188,801)	(1,878,162)
ஐயக் கடனுக்கான விசேட ஒதுக்கம்		-
		-

குறிப்பு 08 **இருப்பு**	**உண்மை 2024(ரூ.)**	**உண்மை 2023(ரூ.)**
3301 எழுதுகருவிகள்	720,580	843,249
3302 அச்சுப் பொருட்கள்	119,219	69,842
3303 கட்டிடப் பொருட்கள்	391,064	182,703
3304 கற்புல, செவிப்புல உபகரணங்கள்	6,552	6,552
3305 நானாவித இருப்புக்கள்	572,252	563,938
3506 வெளியீடு ii – நூல்கள் மற்றும் சஞ்சிகைகள்	296,115	301,390
வெளியீடு ii – அச்சுப் பொருட்களின் இருப்பு	-	-
	2,105,783	**1,967,673**

குறிப்பு 09	உண்மை 2024 (ரூ.)	உண்மை 2023 (ரூ.)
வங்கியிலுள்ள காசு (மக்கள் வங்கி, கட்டுகஸ்டோட்டை)		
கற்கை மற்றும் பயிற்சிக் கணக்கு 0089-1001-32648143	**106,014**	4,621,506
சேமிப்புக் கணக்கு 0089-1001-38092967	947,870	634,926
அரசாங்க கணக்கு 0089-1001-92648140	8,274,660	8,643,539
சேவைகள் கட்டணக் கணக்கு 0089-1001-50002158	282,350	128,385
பணிக்கொடை நிதிக் கணக்கு 0089-2001-90030993	1,064,220	1,037,097
வெளியீட்டுக் கணக்கு II 0089-1001-50018442	497,578	714,320
	11,172,692	**15,779,772**

குறிப்பு 10	உண்மை 2024 (ரூ.)	உண்மை 2023 (ரூ.)
மூலதனம்	233,254,215	233,254,215
சீராக்கல் - கூட்டுக / குறைக்க	-	-
மீதி	233,254,215	233,254,215

குறிப்பு 11	உண்மை 2024(ரூ.)	உண்மை 2023 (ரூ.)
திரட்டிய இலாபம் / (நட்டம்)		
சனவரி 01 ஆம் திகதிக்கு மீதி	(100,953,649)	(102,992,269)
சீராக்கல்கள் - கூட்டுக / குறைக்க – முன்னைய ஆண்டுக்கான சீராக்கல்		
வேறு - கூட்டுக	348,718,745.90	64,759
வேறு – (குறைக்க)	(4,149,622.01)	**(1,029,574)**
	344,569,124	**(964,815)**
முன்னைய ஆண்டின் சீராக்கல்களின் பின்னர் திரட்டிய இலாபம் / (நட்டம்)	**243,615,474**	**(103,957,083)**
கூட்டுக – காலப்பகுதிக்கான மிகை /(குறை)	(35,22,227)	3,003,434
டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி	**208,393,248**	**100,953,649**

குறிப்பு 12	உண்மை 2024(ரூ.)	உண்மை 2023 (ரூ.)
திறைசேரியிடமிருந்து கிடைத்த மூலதன ஏற்பாடுகள்		
01.01 ஆம் திகதிக்கு மீதி	334,610,883	353,134,233
கூட்டுக – சீராக்கல்	-	-
	334,610,883	353,134,233
கூட்டுக – ஆண்டுக்கான மூலதனக் கொடை பெறுகை	-	-
	334,610,883	353,134,233
குறைக்க - மூலதன கொடைகளின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் தேய்மானம்	(334,610,883)	(18,523,350)
	-	**334,610,883**

குறிப்பு 13	உண்மை 2024 (ரூ.)	உண்மை 2023 (ரூ.)
பௌதீக அபிவிருத்தி மற்றும் கொள்முதல் நடவடிக்கைகள்		
அமைச்சிடம் கிடைத்த மூலதனக் கொடை, கூட்டுறவு நிதி மற்றும் ஏனையன		
01.01 ஆம் திகதிக்கு மீதி	31,737,509	29,331,759
கூட்டுக – ஆண்டுக்கான பெறுகைகள்	**8,000,000**	**2,405,750**
	39,737,509	**31,737,509**
குறைக்க - மூலதன கொடைகளின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் தேய்மானம்	(18,224,898)	(18,224,898)
வருமானம் மற்றும் செலவுக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டது	**(8,000,000)**	-
	(13,512,611)	-
	-	**13,512,610.56**

குறிப்பு 14	உண்மை 2024 (ரூ.)	உண்மை 2023 (ரூ.)
கடன் கொடுத்தோர் மற்றும் நின்ற செலவினம்		
4001 தொலைபேசிக் கட்டணங்கள்	72,929	72,512
4002 நீர்க் கட்டணங்கள்	-	3,703
4003 மின்சாரக் கட்டணங்கள்	375,653	546,555
4004 விரிவுரைக் கட்டணங்கள்	105,575	60,100
4005 வேறு நின்ற செலவினங்கள்	1,749,911	475,743
4008 **இதர கட்டுப்பாட்டுக் கணக்கு**	-	-
4015 செலுத்த வேண்டிய அரசாங்க கணக்காய்வுக் கட்டணம்	850,000	880,000
4016 திறைசேரிக்கு செலுத்த வேண்டிய தொகை	31,600	11,841
4018 வெளி ஆட்களின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான முற்பணம் பெறுகை	407,927	870,306
4019 பாதுகாப்புச் சேவைகள்	338,905	373,798
4020 துப்பரவேற்பாட்டுச் சேவைகள் மற்றும் சுத்திகரிப்புச் சேவைகள்	1,954,709	726,658
4021 ஆடை கழுவும் சேவை	-	-
4022 கட்டிடம் நிர்மாணிப்பு (CECB மற்றும் ஏனையன)	7,098,096	9,923,923
(அட்டவணை -12 A இற்கமைய) முற்பணம் பெறுகை	523,673	3,276,310
4027 வழங்குநர்களுக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள்	75,579	-
4028 **பேருந்து வாடகை முன்பணம்**	-	-
4029 **பெறப்பட்ட பரிமாற்ற நிதிகள்**	-	-
4035 சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கு (அமய ஊழியர்கள்)	-	-
4040 மீளச் செலுத்த வேண்டிய பாடநெறிக் கட்டணம்	88,200	34,500
4041 உற்பத்தித்திறன் கட்டுப்பாட்டுக் கணக்கு	110,811	110,811
3901 வேறு தடுத்துவைத்தல்கள்	-	-
3902 பாதுகாப்பு வைப்பு	671,060	656,960
3903 திருப்பிச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்கள்	140,000	180,000
3906 பிணை வைப்புத் தொகை key money	153,000	243,000
4043 VAT **செலுத்த வேண்டிய கணக்கு**	-	-

4069 உணவு வழங்குநர்களுக்காக செலுத்த வேண்டியது	-	-
4049 செலுத்த வேண்டிய எரிபொருள் கட்டணம்	-	-
4057 மக்கள் வங்கியிடம் கிடைத்த கொடை	150,608	150,608
4059 **வெளியீட்டின் போது aat க்கு செலுத்த வேண்டியவை**	-	-
4062 செலுத்த வேண்டிய தேசத்தை கட்டியெழுப்பும் வரி(NBT)	-	-
4063 முன்னதாகக் கிடைத்த விடுதிக் கட்டணம்	2,450	2,450
4065 செலுத்த வேண்டிய தடுத்துவைத்தல் வரி	-	-
4064 செலுத்த வேண்டிய ஆலோசனைக் கட்டணம்	-	108,451
4068 செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணம்	100	7,275
4070 செலுத்த வேண்டிய விடுதிக் கட்டணம்	306,743	429,930
4071 ஆலோசனை சேவை கட்டுப்பாட்டுக் கணக்கு	76,972	76,972
4072 தயாசிறி பேக்கர்ஸ்	56,390	56,390
4073 அவர் நேசன் உணவு வழங்குனர்கள்	47,018	1,089,058
4074 **காந்தி மங்கள மந்திரியா**	365,742	-
பிரகடனக் கணக்கு II கடன் கொடுத்தோர் மற்றும் நின்ற செலவினங்கள்	14,499	252,153
	15,768,150	**20,620,006**

குறிப்பு 15	**உண்மை 2024 (ரூ.)**	**உண்மை 2023 (ரூ.)**	**வரவு செலவுத்திட்ட மதிப்பீடு 2024 (ரூ.)**
மீண்டெழும் செலவினம் (குறியீட்டு இலக்கம் 11)			
1021 திறைசேரியிடமிருந்து கிடைத்த கொடை	49,097,021	55,650,000	51,921,550
1020 கூட்டுறவு நிதியிடமிருந்து கிடைத்த கொடை	-	290,000	-
1030 மக்கள் வங்கி கூட்டுறவு நிதியிடமிருந்து கிடைத்த கொடை	-	-	-
	49,097,021	**55,940,000**	**51,921,550**

குறிப்பு 16	உண்மை 2024 (ரூ.)	உண்மை 2023 (ரூ.)	வரவு செலவுத்திட்ட மதிப்பீடு 2024 (ரூ.)
ஏனைய வருமானங்கள் (குறியீட்டு இலக்கம் 11)			
1001-1011 பாடநெறிக் கட்டணம் (அட்டவணை 14 –A)	19,450,477	16,502,548	19,136,304
1012 அறைக் கட்டணம்	10,244,335	9,973,558	9,460,000
1014 விரிவுரை மண்டபக் கட்டணம்	4,667,375	5,388,910	4,000,000
1014 கேட்போர்கூட மண்டபக் கட்டணம்	12,049,190	11,152,340	9,400,000
1015 வீட்டு வாடகை	915,838	864,570	900,000
1023 அச்சுச் சேவைகள்	94,064	294,449	85,000
1024 நூல்நிலைய கட்டணம்	76,500	100,500	70,000
1025 பரீட்சைக் கட்டணம்	131,312	65,238	-
1026 நிலையான வைப்புக்கள், சேமிப்பு மற்றும் பாதுகாப்பு வைப்பு வட்டி	3,743,983	3,830,533	4,600,000
1027 பதவியணிக் கடன் வட்டி	110,298	111,901	100,000
1035 மீளச் செலுத்தாக கேள்வி வைப்பு	33,000	91,750	40,000
சந்தர்ப்ப ரீதியான செலவின நிவாரணக் கடன் வட்டி	217,970	420,960	-
1036 நிலையான சொத்து விற்பனை மூலம் பெற்ற இலாபம்	-	274,935	-
நானாவித வருமானங்கள் - (அட்டவணை 16-B)	3,981,576	5,369,308	3,595,000
1043 உணவு வழங்கல் அடிப்படையில் தரகு	2,565,717	2,531,078	2,500,000
1069 கட்டிட வாடகை வருமானம்	1,420,000	1,187,669	1,367,500
1063 தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி	-	-	-
ஐயக் கடனுக்கான மிகை ஒதுக்கம்	300,000	-	-
	38,022	-	-
	60,039,656	**58,160,248**	**55,253,804**

குறிப்பு: 16.1			
ஏனைய வருமானம்			
VAT-ஐ IRD-க்கு திருப்பி செலுத்த வேண்டியது	**32,319,198**		
	32,319,198		

குறிப்பு 17	**உண்மை 2024 (ரூ.)**	**உண்மை 2023 (ரூ.)**	**வரவு செலவுத்திட்ட மதிப்பீடு 2024 (ரூ.)**
ஆளுக்குரிய சம்பளங்கள் (குறியீட்டு இலக்கம் 01)			
101 சம்பளமும், வேதனமும்	36,538,356	40,974,547	38,048,271
104 கொடுப்பனவுகள்	1,141,000	1,352,082	675,000
105 ஊழியர் சேமலாப நிதியம் (நிறுவகத்தின் பங்களிப்பு)	4,318,766	4,126,635	4,407,364
106 ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்பு	936,700	897,191	957,716
114 பதில் கடமையாற்றும் கொடுப்பனவு	-	-	-
118 பணிக்கொடை	3,355,995	1,318,868	1,200,000
119 ஓய்வூதிய சம்பள நிதியத்திற்கான பங்களிப்பு	28,107	440,131	49,400
	46,321,925	**49,109,454**	**45,337,751**

மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் லீவு நாள் சம்பளம்	உண்மை 2024 (ரூ.)	உண்மை 2023 (ரூ.)	வரவு செலவுத்திட்ட மதிப்பீடு 2024 (ரூ.)
103 மேலதிக நேரக் கொடுப்பனவு	461,535	1,079,751	400,000
112 லீவு நாள் சம்பளம்	494,375	723,294	600,000
	1,155,910	**1,803,045**	**1,000,000**

விரிவுரைக் கட்டணம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	உண்மை 2023 (ரூ.)	உண்மை 2022 (ரூ.)	வரவு செலவுத்திட்ட மதிப்பீடு 2023 (ரூ.)
151 விரிவுரைக் கட்டணம்	1,618,775	2,389,340	2,149,767
153 பரீட்சை மேற்பார்வைக் கட்டணம்	93,300	143,050	159,480
154 பாடநெறி ஒருங்கிணைப்புக் கட்டணம்	-	-	-
110 முகாமைத்துவ சபை கூட்டங்களில் பங்கேற்பதற்கான கொடுப்பனவு	168,000	300,000	300,000
115 கணக்காய்வுக் குழுக் கொடுப்பனவு	78,000	120,000	120,000
155 வினாத்தாள் தயார் செய்வதற்கான கட்டணம்	251,645	384,835	265,000
156 விடைத்தாள்களை திருத்தும் கட்டணம்	199,143	56,777	174,010
158 ஆலோசனைக் கட்டணம்	22,500	55,688	-
159 பாடநெறி நிருவாகக் கட்டணம்	-	-	-
161 ஆராய்ச்சி அறிக்கைகளை மதிப்பீடு செய்தல்	211,000	57,000	200,000
162 கட்டுரை மதிப்பீடு	96,800	86,750	127,700
533 வினாத்தாள்களை தயார்செய்யும் கடட்ணம்	31,700	50,050	19,000
534 பாடவிதான அபிவிருத்தி	-	-	200,000
நிவாரணக் கடன் மீது சேவைபெறுநர்களின் பயன்கள்	217,970	420,960	
	2,988,833	**4,064,449**	**3,714,957**

குறிப்பு 18	உண்மை 2024 (ரூ.)	உண்மை 2023 (ரூ.)	வரவு செலவுத்திட்ட மதிப்பீடு 2024 (ரூ.)
பிரயாணச் செலவினம் (குறியீட்டு இலக்கம் 02)			
201 உள்நாடு	89,329	219,426	100,000
202 வெளிநாடு	-	-	
	89,329	**219,426**	**100,000**

குறிப்பு 19	உண்மை 2024 (ரூ.)	உண்மை 2023 (ரூ.)	வரவு செலவுத்திட்ட மதிப்பீடு 2024 (ரூ.)
பெறுகை (குறியீட்டு இலக்கம் 03)			
301 எழுதுகருவியும், அலுவலகத் தேவைகளும்	706,971	969,844	991,045
302 எரிபொருளும், உராய்வு நீக்கிகளும்	4,053,527	6,237,571	4,525,480
303 அச்சுப் பொருட்கள்	437,185	862,354	691,045
304 பத்திரிகை மற்றும் சஞ்சிகைகள்	82,560	84,070	80,000
306 உணவுச் செலவினம்	4,397,847	2,935,568	3,415,160
307 இயந்திரசாதனம் மற்றும் மின் உபகரணம்	184,066	214,114	400,000
310 வேறு பெறுகைகள்	342,979	549,167	400,000
313 நீர் போத்தல் செலவினம்	200,599	283,160	200,000
	10,405,734	**12,135,848**	**10,702,730**

குறிப்பு 20	உண்மை 2024 (ரூ.)	உண்மை 2023 (ரூ.)	வரவு செலவுத்திட்ட மதிப்பீடு 2024 (ரூ.)
பராமரிப்புச் செலவினம் (குறியீட்டு இலக்கம் 04)			
401 மோட்டார் வாகனம்	1,442,965	1,984,162	1,384,150
402 இயந்திரசாதனங்களும், உபகரணமும்	1,924,974	503,013	2,155,000
403 கட்டிடம்	1,197,161	1,273,745	1,373,000
404 தளபாடம்	2,950	57,270	600,000
405 கணினி உதிரிபாகங்கள்	-	-	-
406 வாகன உரிமப்பத்திரமும், காப்புறுதியும்	99,024	51,150	100,000
408 நில பராமரிப்பு	420,866	-	1,320,000
	5,087,940	**3,869,340**	**6,932,150**

குறிப்பு 21	உண்மை 2024 (ரூ.)	உண்மை 2023 (ரூ.)	வரவு செலவுத்திட்ட மதிப்பீடு 2024 (ரூ.)
ஒப்பந்த சேவைகள் (குறியீட்டு இலக்கம் 05)			
501 போக்குவரத்து	424,945	1,313,999	626,420
502 தொலைபேசிக் கட்டணம்	1,360,943	1,520,442	1,536,200
503 தபால் கட்டணம்	347,220	287,977	400,000
504 மின்சாரம்	4,538,563	5,102,066	5,620,000
505 நீர்	1,212,370	733,957	1,250,000
506 மற்றும் 511 வாடகைக் கட்டணம் மற்றும் குத்தகை	25,685	265,506	30,000
508 கணக்காய்வுக் கட்டணம்	762,960	880,000	750,000
509 ஆலோசனைக் கட்டணம்	-	70,000	-
510 விளம்பர பிரச்சாரம்	328,043	583,193	1,230,000
512 பாதுகாப்புச் சேவைகள்	4,181,582	4,353,605	4,333,575
513 துப்பரவேற்பாட்டுச் சேவைகள்	7,892,518	7,750,803	7,535,507
514 துவைத்தல் சேவை	789,325	773,742	800,000
515 தோட்டத்தை சுத்தம் செய்தல்25இ217	25,217	42,930	50,000
516 காப்புறுதி	602,246	758,606	650,000
517 மொழிபெயர்ப்புக் கட்டணம்	89,363	90,788	100,000
519 சீருடை கொடுப்பனவு	16,000	20,000	30,000
520 ஊழியர் பயிற்சி (உள்நாடு / வெளிநாடு)	2,600	84,736	50,000
521 பங்களிப்பு மற்றும் உறுப்பினர் கட்டணம்	9,000	348,432	-
523 ஏனைய செலவினங்கள்(19 A)	94,372	216,530	150,000
524 அச்சுக் கட்டணம் (நிதிப் பிரிவு)	353,685	280,732	425,000
525 அறவீடுகள் - செவிப்புல கற்புல	-	31,000	-
526 முத்திரைக் கட்டணம்	11,825	7,875	15,000
530 மண்டபக் கட்டணம்	100,000	40,000	90,000
531 தங்குமிடக் கட்டணம்	-	21,000	30,000
535 ஆராய்ச்சிக் கட்டணம்	10,000	32,250	200,000
536 விலைமதிப்புக் கட்டணங்கள்	25,560	**50,240**	**50,000**
	23,204,021	**25,660,407**	**25,951,702**

குறிப்பு 22	உண்மை 2024 (ரூ.)	உண்மை 2023 (ரூ.)	வரவு செலவுத்திட்ட மதிப்பீடு 2024(ரூ.)
வேறு செலவினங்கள் (குறியீட்டு இலக்கம் 06)			
601 சட்டக் கட்டணம்	-	109,500	100,000
605 நட்டஈடு	-	-	-
607 உபசரணை செலவினம் - அலுவலக ஊழியர் / விருந்தினர்களுக்கு	879,765	1,168,524	792,700
703 வங்கிக் கட்டணம்	31,163	42,429	40,000
705 பதவியணியினருக்கான கடன் மீதான வட்டி	-	-	-
707 தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் தடுத்துவைத்தல் வரி	188,360	201,265	200,00
610 அறவிட முடியாக் கடன் ஒதுக்கம்	-	75,260	-
713 செலாவணி மாற்றல் நட்டம்	59,784,745	-	-
	60,884,033	**1,596,978**	**1,132,700**

உப குறிப்பு

குறிப்பு : 7 - A	**உண்மை 2024(ரூ.)**	**உண்மை 2023 (ரூ.)**
கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணங்கள்		
3501 கூட்டுறவு டிப்ளோமா பாடநெறி	352,775	60,167
3502 கூட்டுறவு சான்றிதழ் பாடநெறி	-	-
3503 செயலமர்வுகள்	20,000	34,365
3505 குறுங்கால கணினிப் பயிற்சிப் பாடநெறிகள்	9,750	-
3506 குறுங்கால வேறு பாடநெறிகள்	716,257	-
3507 தொழில்சார் பாடநெறிகள்	-	-
3508 NICD கணினி டிப்ளோமா	228,400	118,833
3509 வியாபார முகாமைத்துவ டிப்ளோமா	-	-
3511 ஆங்கில பாடநெறி	16,000	6,750
	1,343,182	**220,115**

குறிப்பு :14-A	உண்மை 2024 (ரூ.)	உண்மை 2023 (ரூ.)
முன்னதாக கிடைத்த பாடநெறிக் கட்டணங்கள்		
4023 கூட்டுறவு டிப்ளோமா பாடநெறி	437,973	2,624,435
4024 செயலமர்வுகள்	-	3-7,167
4025 வேறு பாடநெறிகள்	85,700	614,708
4042 தொழில்சார் கற்கை நெறிகள்	=	=
	523,673	**3,276,310**

குறிப்பு :16-A	உண்மை 2024 (ரூ.)	உண்மை 2023 (ரூ.)	வரவு செலவுத்திட்ட மதிப்பீடு 2024 (ரூ.)
பாடநெறிக் கட்டண வருமானம்			
1001-1 கூட்டுறவு டிப்ளோமா பாடநெறி	7,473,792	6,363,071	6,362,729
1001-2 வியாபார அபிவிருத்தி டிப்ளோமா	-	-	-
1002 NICD கணினி டிப்ளோமா	872,917	441,833	881,500
1003 கணினி சான்றிதழ் பாடநெறி	719,808	1,283,792	606,375
1004 i ஆங்கில சான்றிதழ் பாடநெறி	134,400	531,250	330,000
1004 ii யப்பான் மொழிப் பாடநெறி	-	70,000	-
1005 தொழில்சார் பாடநெறிகள்	-	-	-
1005-01 பாடநெறிக் கட்டணம் கணக்கீட்டு தொழில்நுட்பவியல் நிறுவகம்	-	-	-
1005-02 பாடநெறிக் கட்டணம் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகம்	-	-	-
1005-06 உயர் கணக்கீட்டு டிப்ளோமா பாடநெறி	-	-	-
1007 கூட்டுறவு சான்றிதழ் பாடநெறி	-	-	-
1008 குறுங்கால செயலமர்வுகள்	6,088,000	3,146,070	7,292,000
1009 குறுங்கால பாடநெறிகள் - தகவல் தொழில்நுட்பம்	393,367	413,533	413,700
1010 குறுங்கால பாடநெறிகள்	3,768,193	4,252,998	3,250,000
	19,450,477	**16,502,548**	**19,136,304**

குறிப்பு:16-B	உண்மை 2024 (ரூ.)	உண்மை 2023 (ரூ.)	வரவு செலவுத்திட்ட மதிப்பீடு 2024(ரூ.)
வேறு வருமானங்கள்			
1016 தோட்ட வருமானம்	52,050	83,420	100,000
1018 சேவைக் கட்டணம்	561,756	630,744	-
1032 பதவியணிக்கான கொடுப்பனவுகள்	379,700	472,000	800,000
1034 விடுதி முகாமையாளர் கட்டணம்	-	-	-
1038 பிரதிபண்ணிக் கட்டணம்	310	-	-
1040 உபகரணங்களை வாடகைக்கு வழங்குதல்	1,111,236	1,461,274	1,075,000
1044 நீர் போத்தல்கள்	371,270	353,346	400,000
1045 வழங்குநர்களைப் பதிவு செய்தல்	221,000	192,000	150,000
1047 தண்டப்பணம்	34,355	63,613	5,000
1048 புத்தகம் கட்டுதல்	1,800	1,225	5,000
1051 நானாவித வருமானங்கள் (14-B-1)	113,642	873,621	200,000
1056 பஸ் வண்டியின் வருமானம்	939,657	706,240	825,000
1061 மேலதிக வருமானம்	36,556	56,242	-
1062 உரிமை கோராத வைப்புக்கள்	83,244	444,808	-
1080 AAT வெளியீடுகளின் தரகுப் பணம்	-	-	-
1071 பத்திரிகை மற்றும் பயன்படுத்தப்படா விடயங்களின் விற்பனை		24,875	35,000
1086 இழப்பு ஏற்பட்டுள்ள பொருட்களுக்கான அறவீடுகள்		5,900	-
1087 இனங்காணப்படாத வைப்புக்கள்	-	-	
1088 ஆராய்ச்சிக் கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் கட்டணம்	-	-	
1089 பாடநெறிகள் பற்றி அறிவுறுத்தும் கட்டணங்கள்	-	-	
1093 **நன்கொடை**	**75,000**	-	-
	3,981,576	**5,369,308**	**3,595,000**

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் - பிரகடன நிதி
2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு
நிதி நிலைமைக் கூற்று

சொத்துக்கள்	**உண்மை 2024 (ரூ.)**			**உண்மை 2023 (ரூ.)**
நடைமுறையல்லாத சொத்துக்கள்				
நடைமுறைச் சொத்துக்கள்				
நடைமுறை முதலீடு		10,474,508		9,399,975
வர்த்தகக் கடன்பட்டோர் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகள்	-		-	
கிடைக்க வேண்டிய வட்டி	381,674		469,741	
இருப்பு - மூலப்பொருட்கள்				
- வெளியீடுகள்	296,115		301,389.55	
வங்கியிலுள்ள காசு	**497,578**	1,175,367	**714,319,.81**	1,485,451
மொத்த சொத்துக்கள்		**11,649,875**		**10,885,426**
உரிமையாண்மையும் பொறுப்புக்களும்				
பிரகடன நிதியம் 2014.01.01 ஆம் திகதிக்கு		3,417,039		3,417,039
திரட்டிய இலாபம் /(நட்டம்) 01.01 ஆம் திகதிக்கு	7,216,234		5,888,463	
சீராக்கல்	-	-	-	-
ஆண்டுக்குரிய இலாபம்	1,002,104		1,327,771	
திரட்டிய இலாபம் /(நட்டம்) 12.31 ஆம் திகதிக்கு		8,218,338		7,216,234
திரட்டிய நிதி –12.31 ஆம் திகதிக்கு		11,635,377		10,633,273
நடைமுறைப் பொறுப்புக்கள்				
கடன்கொடுத்தோர் மற்றும் நின்ற செலவினம்	14,499		**252,153.00**	
முற்பணம் பெறுகை		14,499	-	**252,153**
மொத்த உரிமையாண்மையும், பொறுப்புக்களும்		**11,649,875**		**10,885,426**

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் - பிரகடன நிதி
2024.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

வருமானம்	**உண்மை 2024 (ரூ.)**			**உண்மை 2023 (ரூ.)**
வெளியீடுகளின் விற்பனை	36,560.00			99,645.00
குறைக்க :				
விற்பனைச் செலவினம்	(19,772.83)			(41,005.50)
மொத்த இலாபம்		**16,787.17**		**58,639.50**
கூட்டுக : வேறு வருமானங்கள்				
தரகுப்பணம்				
நிலையான வைப்புக்குப் பெற்ற வட்டி	1,043,020.03		1,463,237.11	
உரிமை கோரப்படாத நிலுவைத் தொகைகள்		1,043,020.03	26,660.00	
				1,489,897.11
மொத்த வருமானம்		**1,059,807.20**		**1,548,536.61**
குறைக்க : செலவினம்				
ஆக்கவுரிமை			76,800.00	
கழிவு			3,470.00	
தடுத்துவைத்தல் வரி	56,557.37		85,525.00	
வெளியீடுகளை மதிப்பீடு செய்தல்			30,000.00	
அன்பளிப்புக்கள்			14,970.00	
வங்கி கட்டணம்	1,145.64			
வேர்ட் புரொசசின் கட்டணம்		57,703.01	10,000.00	220,765.95
தேறிய இலாபம்		**1,002,104.19**		**1,327,770.66**

5.
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. CPCG/KD/B2/NICD/FA /2024/A/29 திகதி : 2025 யூன் மாதம் 09 ஆம் திகதி

தவிசாளர்,

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்,

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பிலான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 *தகுதிவாய்ந்த கணக்காய்வு அபிப்பிராயம்*

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2001 இன் 01 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 22 ஆம் பிரிவு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படல் வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய எனது கட்டளையின் பேரில் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கு அமைய எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும், நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) மீளாய்வு ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த பொறி மற்றும் இயந்திரங்களின் பெறுமதி மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணைக்கு அமைய மேற்படி பெறுமதிகளுடன் ஒப்பிடும் போது சொத்துக்களின் செலவினம் அல்லது மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் ரூபா 25,013,510 ஆன, திரட்டிய தேய்மானப் பெறுமதியில் ரூபா 41,617,125 ஆன மற்றும் தேறிய பெறுமதியில் ரூபா 15,174,310 ஆன ஒவ்வாமை மற்றும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அட்டவணைகளுக்கு அமைய முற்கரண்டி மற்றும் ஏனைய உபகரணங்களின் திரட்டிய தேய்வுக் கணக்கு ரூபா 324,187 ஆன ஒவ்வாமை அவதானிப்புச் செய்யப்பட்டது.

(ஆ) கூட்டுத்தொகை ரூபா 17,193,681 ஆன சொத்து விடயங்கள் 08 இன் கூட்டுத்தொகை ரூபா 8,193,720 ஆன 02 பொறுப்பு விடயங்கள் மற்றும் ரூபா 20,392,820 ஆன உரித்து மீதிக்குரிய நிலையான சொத்துப் பதிவேடுகள், மீதியை உறுதி செய்துகொள்ளும் ஆவணங்கள், உரிய ஆவணக்கோப்புக்கள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் உறுதி செய்துகொள்ள முடியவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். குறித்த கணக்கீட்டு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிறுவகத்தின் 2024 ஆண்டறிக்கையில் உள்ளடங்கும் ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதியின் பின்னர் எனக்குப் பெற்றுத்தர எதிர்பார்க்கப்படுகின்ற தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2024 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடங்கியுள்ள போதிலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது பற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காக தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதனால் கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுகள் பற்றிய எனது கருத்துக்கள் ஏனைய தகவல்களை வெளிப்படுத்துவதில்லை என்பதுடன் நான் அது பற்றி எவ்வகையிலும் சான்றுப்படுத்துவதோ அல்லது கருத்துக்களை வெளியிடுவதோ இல்லை.

நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கணக்காய்வு தொடர்பில், எனது பொறுப்பாக இருப்பது ஏனைய தகவல்களைப் பெற்றுக் கொள்ள இயலுமாகின்ற போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு விதமாகக் பெற்றுக் கொண்ட எனது அறிவுக்கு அமைய போதியளவில் பொருத்தமற்றதாக உள்ளதா என்பது பற்றி ஆராய்வதாகும்.

நிறுவகத்தின் 2024 ஆண்டறிக்கையை வாசிக்கும் போது, அதில் பொருண்மையான தவறாக காட்டப்பட்டிருத்தல் உள்ளதென்று நான் தீர்மானம் செய்யும் பட்சத்தில், சீராக்கல்களைச் செய்வதற்காக நிருவகிக்கும் தரப்பினர்களுக்கு மேற்படி விடயங்களை தொடர்பாடல் செய்தல் வேண்டும். மேலும் சீராக்கல் செய்யப்படாத தவறாக வெளிப்படுத்தப்பட்டிருப்பது காணப்படின், அவை அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் நான் எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும், அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

பொதுவாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள்

போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கட்டுபாடுகளை மேற்கொள்ளும் தரப்பினர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

2. வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய, கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களையும் நான் பெற்றுக் கொண்டேன் என்பதுடன், எனது பரிசோதனைகளின் போது தெரியவந்துள்ளவாறு முறையான நிதி அறிக்கைகளை தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் பேணிவந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (வை) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய நிறுவகம் சமர்ப்பித்துள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திசைவதாக உள்ளன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (வை) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கடந்த ஆண்டில் நான் சமர்ப்பித்திருந்த சிபாரிசுகள் இந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் போதியளவிலான விடயங்களின் வரையறைகளுக்குள், பின்வரும்

கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்குக் காரணமான எந்தவொரு விடயத்தையும் நான் அவதானிப்புச் செய்யவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய நிறுவகத்தின் நிருவாக சபையின் யாராயினும் உறுப்பினர் ஒருவர் நிறுவகத்துடன் தொடர்புகொண்டு யாதாயினுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாக சாதாரண வியாபார நிலைமைக்கு புறம்பாக செயற்பட்டுள்ளமை.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய யாதாயினும் ஏற்புடைய எழுத்து மூலமான சட்டம் அல்லது நிறுவகத்தின் நிருவாக சபையினால் வெளியிடப்பட்டுள்ள வேறு பொதுவான அல்லது விசேடமான ஏற்பாடுகளுக்கு ஒவ்வாமை இடம்பெறுகின்றவாறு செயற்பட்டுள்ளமை.

	சட்டம், விதி / ஒழுங்குவிதிக்கான தொடர்பு	பெறுமதி ரூபா	விபரம்
(அ)	நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் வெளியிடப்பட்ட 2018 இன் 04.̓.2018 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை மற்றும் நிதி அல்லாத சொத்துக்களை விலைமதிப்புச் செய்வதற்கான வழிகாட்டல்கள்	822,298,888	காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு 05 வருடங்களுக்கும் ஒரு தடவை மீண்டும் விலைமதிப்புச் செய்யப்படல் வேண்டுமாயினும், நிறுவகம் 2018 ஆகஸ்ட் 01 ஆம் திகதியில் இறுதியாக காணிகள் மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்திருந்ததுடன், 06 வருடங்கள் கடந்துள்ள போதிலும் மீளாய்வு ஆண்டில் மீண்டும் விலைமதிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	2016 டிசம்பர் 22 ஆம் திகதிய 2004.̓.பொக.̓.1(2016-திருத்தம்) ஆம் இலக்க நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபையின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 3.1 பிரிவு		சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய நிறுவகத்தின் நூலக இருப்புக் கணிப்பீடு மீளாய்வு ஆண்டில் மற்றும் அதற்கு முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய நிறுவகத்தின் தத்துவம், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு ஒவ்வாமை ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை.

(அ) 2001 இன் 01 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 04 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டின் செயற்றிட்டம் மற்றும் ஆண்டின் இறுதியில் அதன் முன்னேற்றத்தை பரிசோதிக்கும் போது, நிறுவகத்தை தாபித்ததன் 10 நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த பயிற்சிப் பாடநெறிகள் ∴ கூட்ட அமர்வுகள் 46 மற்றும் செயற்பாடுகள் 08 இல் பாடநெறிகள் ∴கூட்ட அமர்வுகள் 18 உம், செயற்பாடுகள் 06 உம் பூரணமாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொதுவாக முகாமைத்துவ நிபுணத்துவம் அவசியமாகின்ற கூட்டுறவு தொழில்முயற்சிகளை பொறுப்பேற்றுக் கொண்டு முகாமைத்துவம் செய்தல் மற்றும் மாதிரி கூட்டுறவுக் கிராமங்கள், மாதிரிக் கூட்டுறவு வர்த்தக நிலையங்கள் மற்றும் பிராந்திய நிலையங்களைத் தாபித்தல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வது தொடர்பாக மீளாய்வு ஆண்டில் நிறுவகம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) நிறுவகத்தை தாபித்தல் சட்டத்தின் நோக்கமொன்றான நிறுவகத்தின் பணிகளுக்கு சமமான பணிகளை நிறைவேற்றுகின்ற இலங்கையின் அல்லது அதற்கு வெளியேயுள்ள நிறுவனங்களுடன் ஒத்துழைப்பைப் பேணி நடவடிக்கை மேற்கொள்வதற்காக "சர்வதேச கூட்டுறவு நிறுவனத்தின்" அங்கத்துவத்தை பேணிவருதல் என்பது குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், நிறுவகம் சர்வதேச கூட்டுறவு அமைப்பின் அங்கத்துவத்தை 2021 ஆம் ஆண்டு முதல் இற்றைப்படுத்தியிருக்கவில்லை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்கள் தவிர நிறுவகத்தின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறன்மிக்கவாறும் மற்றும் விளைதிறன்மிக்கவாறும் காலப்பகுதிக்குள் உரிய சட்டங்கள், விதிகளுக்கு இசைவாக பெறுகைகளை மேற்கொண்டு பயன்படுத்தியிருக்கவில்லை என்பது.

(அ) 2009 ஆம் ஆண்டு பல்தேவைக் கட்டிடத்தை நிர்மாணிக்கவென கிடைத்த நிதியில் ரூபா 305,589 உம், 2014 ஆண்டு பயிற்சிப் பாடநெறிகளின் தரத்தை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்திற்காக தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்திடம் கிடைத்த நிதியில் எஞ்சியிருந்த

ரூபா 744,921 மற்றும் கேட்போர் கூடத்தை நிர்மாணிக்கவென 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கிடைத்த தொகையில் செலவிடப்படாத ரூபா 619,355 உம் என்ற வகையில் கூட்டுத்தொகை ரூபா 1,669,865 ஆன தொகை விளைதிறன்மிக்கவாறு பயன்படுத்தப்படாது மீளாய்வு ஆண்டின் இறுதியிலும் வங்கி நடைமுறைக் கணக்கில் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்பட்டது.

(ஆ) நிறுவகம் 1999 ஆம் ஆண்டு ரூபா 2,368,359 ஐ செலவிட்டு நிர்மாணித்துள்ள இரண்டு மாடிகளைக் கொண்ட மஹவெலி கட்டிட வளவு மற்றும் அதற்குரிய காவலாளி அறை 2002 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாது 20 வருடங்களுக்கும் மேலாக பயனற்ற நிலையில் காணப்படுகின்றமை அவதானிப்புச் செய்யப்பட்டது.

(இ) நிறுவகத்தின் 2025 சதுர அடி அளவில் 40 கணினிகளை உள்ளடக்கிய 03 கணினி ஆய்வுகூடங்கள் 2023 ஆம் ஆண்டின் இறுதி முதல் பயன்படுத்தப்படாது மற்றும் குறைப் பயன்பாட்டு நியைில் காணப்படுவதுடன், அங்கு பொருத்தப்பட்டுள்ள ஒரு சில கணினிகள் செயற்படும் நிலையில் இல்லை என்பதும் அவதானிப்புச் செய்யப்பட்டது.

(ஈ) 2010 ஆம் ஆண்டு முதல் நிர்மாணிப்புக்கள் நிறைவு செய்யப்பட்டு நிறுவகத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ள 05 மாடிகளைக் கொண்ட 14,403 சதுர அடி அளவான பல்தேவைக் கட்டிடத்தில் 10839 சதுர அடி அளவைக் கொண்ட 04 மாடிகள் 2025 ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதி வரையும் 02 முதல் 04 வருடங்களாக பயன்படுத்தப்படாது பயனற்ற நிலையில் காணப்பட்டன.

(உ) நிறுவகத்தின் 2024 செயற்றிட்டத்திற்கு அமைய கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாரா சேவை சேவை வகுதியைச் சேர்ந்த அலுவலர்களுக்கு திட்டமிடப்பட்டிருந்த ஒரு வருட காலத்துக்கான டிப்ளோமா பாடநெறிக்கு எதிர்பார்க்கப்பட்ட விண்ணப்பதாரிகள் இருக்காமை காரணமாக பாடநெறி நடாத்தப்பட்டிருக்கவில்லை. பாடநெறிகள் பற்றிய முன் மதிப்பீடு இன்றி டிப்ளோமா பாடநெறிகளை செயற்றிட்டத்தில் உட்புகுத்தியமை காரணமாக இவ்வாறு நடாத்தப்படாத பாடநெறிகளின் பேரில் நிறுவகத்தின் விரிவுரையாளர்களின் விரிவுரை மணித்தியாலங்கள் சுமார் 720 மணி நேரம் பயனற்றதாக இருந்தது.

(ஊ) நிறுவகத்தின் 2024 ஆண்டின் செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 98 செயற்பாடுகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2024 ஆம் ஆண்டின் செயற்றிட்டம் நியாயமான காலப்பகுதிக்குள் திருத்தம் செய்யப்பட வேண்டுமாயினும் நிறுவகத்தின் திருத்திய செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்ட பணிகளை மாத்திரம் உள்ளடக்கியதாக 2024 டிசம்பர் 30 ஆழ் திகதி திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

(ஏ) நிறுவனத்தில் நடாத்தப்பட்ட உள்ளக மற்றும் வெளிவாரி பாடநெறிகள் தொடர்பாக பின்பற்றப்பட்ட 2022 ஆண்டில் முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நடவடிக்கைமுறையின் (3) 3.1 இற்கமைய பரீட்சைகள் நடாத்தப்பட்டு 04 வாரங்களுக்குள் விடைத்தாள்கள் முதற்தடவை திருத்தம் செய்யப்படல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 16 பாடநெறிகள் தொடர்பான சுமார் 70 பாடங்களுக்குரிய பரீட்சை வினாத்தாள்கள் பரீட்சைகள் பிரிவினால் பரிசோதகரிடம் கையளிப்பதற்கு 01 முதல் 05 மாதங்கள் வரை தாமதம் இடம்பெற்றுள்ளமை அவதானிப்புச் செய்யப்பட்டது.

(ஐ) நிறுவனத்தின் 2023.2024 ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்ட பாடநெறிகள் தொடர்பில் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் பரீட்சைகள் நடவடிக்கைமுறைக்கு அமைய விரிவுரையாளர்களினால் சமகாலத்தில் நிறைவு செய்யப்பட வேண்டுமாயினும், 19 பரீட்சைகளின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதை பூர்த்தி செய்வதற்கு 06 மாதம் முதல் 01 வருடம் வரையான காலம் எடுத்துள்ளது என்பதும் அவதானிப்புச் செய்யப்பட்டது.

(ஒ) தாபன விதிக்கோவையின், 11 ஆம் அத்தியாயத்தின் 13.1.2 ஆம் பிரிவு, 13.4 ஆம் பிரிவு மற்றும் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியைச் சேர்ந்த பணிப்பாளர் நாகம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் நடவடிக்கைமுறையின் 5.1.1 விதிகள் பற்றிக் கவனம் செலுத்தாது ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள பட்டத் தகைமை இல்லாத மற்றும் சேவைசார் அனுபவம் பூர்த்தி செய்யப்படாத அலுவலர்கள் இருவர் மீளாய்வு ஆண்டில் 2 சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு பதில் அடிப்படையில் அமைச்சின் செயலாளரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

(ஓ) நிறுவகத்தின் 09 விடுதிகள் மற்றும் ஒரு சுற்றுலா விடுதியில் காணப்பட்ட 115 அறைகளில் 12 முதல் 34 சதவீதம் எனும் குறைந்தபட்ச எண்ணிக்கையான அறைகள் 2024 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிப்புச் செய்யப்பட்டது.

2.3 வேறு விடயங்கள்

(அ) மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய நிலுவைகள் 03 இன் கூட்டுத்தொகை ரூபா 922,726 ஆகும் என்பதுடன், இதில் 01 முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்கு உரிய ரூபா 11,424 ஆன கடன் நிலுவை மற்றும் 05 வருடங்களுக்கும் மேற்பட்ட ரூபா 790,462 ஆன கடன் நிலுவைகள் மீளாய்வு ஆண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் 04 இன் கூட்டுத்தொகை ரூபா 15,314,815 ஆகும் என்பதுடன் அதில் 01 முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட கூட்டுத்தொகையான ரூபா 364,895 மற்றும் 05 வருடங்களுக்கும் மேற்பட்ட ரூபா 14,949,920 ஆன தொகையை செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

கையொப்பம் / ஜீ.எச்.டி. தர்மபால

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)